பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (02-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:189

## ராணுவத் தேவைக்கு பனைகளை தறிப்பது நிறுத்தப்படவேண்டும்!

### யாழ்.பல்கலைக்கழக பேரவை தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

வடக்கு - கிழக்கில் இராணுவத் தேவைக்காக பனை மரங்கள் கண்மூடித்தனமாகத் தறிக்கப்பட்டு வருகின்றன. இந்த அழிப்பு நடவடிக்கை உடன் நிறுத்தப்படவேண்டும்.

மேற்கண்டவாறு படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பிரதமர், ஜனாதிபதி ஆகியோரைக் கோரும் தீர்மானம் ஒன்றை யாழ். பல்கலைக்கழகப் பேரவை நிறைவேற்றியிருக்கிறது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நேற்று நடைபெற்ற புதிய பேரவையின் முதற் கூட்டத்தில் இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:-

வடக்கு - கிழக்கில் இராணுவத் தேவைகளுக்காகப் பனை மரங்கள் வகைதொகையின்றிக் கண்மூடித்தனமாகத் தறிக்கப்படுகின்றன. இது மிகுந்த வேதனைக்குரியது. பேரிழப்பைத் தருகின்றதும் ஊக்கத்தை மழுங்கடிக்கச் செய்வதுமான செயற்பாடாகும்.

இந்தப் பாரிய அழிப்பானது அந்தந்தப் பகுதிகளில் உள்ள வறிய மக்களின் உப உணவு பெறும் வாழ்க்கைச் சூழலின் சமநிலையைப் பெரிதும் நிலைகுலையச் செய்துவிடும் எனப் பேரவை கருதுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் குரென்ஜே விமான விபத்தில் பலி!



ஜோஹனஸ்பேர்க்,ஜூன்2

தென்னாபிரிக்காவின் கேப் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற ஒரு விமான விபத்தில் அந்த நாட்டின் பிரபல கிரிக்கெட் நட்சத்திரமான ஹன்ஸி குரென்ஜே உயிரிழந்தார்.

இந்த செய்தி உலகெங்கும் கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

கேப்டவுணுக்கு 500 கிலோ மீற்றர் தொலைவில் ஜோர்ஜ் என்னும் நகருக்கு வெளியே விமானம் வீழ்ந்து நொறுங்கியது. வீரர் குரென்ஜேயும் அவரோடு அந்த விமானத்தில் இருந்த வேறு மூவரும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஜோர்ஜ் நகரில் விமானத்தை இறக்குவதற்கு விமானி முயற்சித்தார் என்றும் -

காலநிலை சீராக இல்லாததனால் விமானி (12ஆம் பக்கம் பார்க்க)

# தீவக நெருக்கடி நிலையைத் தணிக்க கண்காணிப்புக் குழு மாற்று யோசனை!

## புலிகள் தரப்போடு புருகோவிட் பேசுவார்

கொழும்பு,ஜூன்2

**அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தீவுப் பகுதி செல்ல அரசு விதித்திருக்கும் நிபந்தனைகளை அடுத்து உருவாகியிருக்கும் நெருக்கடி நிலையைத் தணிக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முயன்று வருகிறது.**

**இந்த விவகாரத்தில் இரு தரப்புக்களையும் ஓர் இணக்கத்துக்குக் கொண்டுவரும் நோக்குடன் மாற்று யோசனைகளைக் கண்காணிப்புக் குழு பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

மாற்று யோசனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புடன் பேச்சு நடத்துவதற்காக கண்காணிப்புக் குழுவின் தலைவா ஜெனரல் ரொண்ட் புருகோவிட் நாளை மறுதினம் செவ்வாயன்று வன்னி செல்லவிருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய தீவுப் பகுதியில் புலிகள் தங்கள் அரசியல் பணிகளை இன்னமும் ஆரம்பிக்கமுடியாத நிலை நீடித்து வருகிறது. தீவகப் பிரதேசத்துக்குள் புலிகளை அனுமதிக்க அங்குள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறுகின்றனர்

மட்டக்களப்பு,ஜூன்2

அரசுபுலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், 'யுனிசெவ்' பிரதிநிதிகள் மற்றும் கல்வி அதிகாரிகள் கொண்ட குழுவினரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அழைத்துச்சென்ற 233 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் பி.ஆர்.எல் அன்ரனிஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஒரே குடும்பத்துக்கு நேர்ந்த அவலம்

## மின்சாரம் தாக்கியோரில் அடுத்த யுவதியும் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்2

திருநெல்வேலியில் உள்ள தமது வீட்டில் 'அன்ரனா' பொருத்த முயற்சித்த சமயம் மின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரில் மூன்றாவது நபரும் சிகிச்சை பலனளிக்காத நிலையில நேற்று உயிரிழந்தார்.

திருநெல்வேலி, வளாக வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் கலைவாணி (வயது 30) என்ற யுவதியே நேற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



... அப்ப தீவகத்துக்கு தனியான உடன்படிக்கை தயாரிக்கினம் போல...

## கண்காணிப்புக்குழு உறுப்பினருக்கு கொலை மிரட்டல்

மட்டக்களப்பு,ஜூன்2

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட குழுவுக்கு விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினரான இராசையா சண்முகநாதனுக்கு தொலைபேசி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சம்மாந்துறை கல்விவலய உதவிக கல்விப் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

'சவப்பெட்டியைத் தயாராக வைத்திருக்கவும். விரைவில் கொலை செய்வோம்' என்று அவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## யாழ்நகரில் மினிவான் தடம்புரண்டது

யாழ்ப்பாணம்,ஜூன்2

முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந் 'டொல்பின்' ரக மினிவான் ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுமாலை தடம்புரண்டது.

அந்த வாகனத்தில் பயணம் செய்த நால்வர் காயமடைந்தனர்.

நேற்றுமாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வானில் வந்தவர்களான சாகுல் அமீர் அசார் (வயது 35-மருதானை, கொழும்பு-10),

(12ஆம் பக்கம் பார்க்க)

### நேரடிப் பேச்சுக்கு முன்பாக

## புலிகள் மீதான தடையை நீக்க ஐரோப்பிய நாடுகள் ஆதரவு!

கொழும்பு,ஜூன்2

ஐரோப்பிய விஜயத்தை முடித்துக்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுஅதிகாலை கொழும்பு திரும்பினார்.

பிரதமரின் ஐரோப்பிய விஜயம் எதிர்பார்த்ததைவிட பெருவெற்றியையும் ஊக்கத்தையும் அளித்திருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை உள்நாட்டில் நீக்குவதற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆசீர்வாதம் பிரதமருக்குக் கிடைத்துள்ளது என்று பிரதமர் அலுவலக வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

அடுத்த மாத ஆரம்பத்தில் தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படு

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதேசத்துக்கும் தொலைபேசி இணைப்புகள்

### பாதுகாப்பு அனுமதி தேவையில்லை

கொழும்பு,ஜூன்2

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம் உட்பட எந்தப் பகுதிக்கும் தொலைபேசி இணைப்புகளை வழங்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டியதில்லை.

மேற்கண்டவாறு ரெலிகொம் நிறுவனத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிக்கு தொலைபேசி இணைப்பு வழங்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு படை அதிகாரியிடம் கேட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால்தான் தொலைபேசி இணைப்பு வழங்க அனுமதி தரமுடி

(12ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில்

## பிரான்ஸ் நாட்டு நிறுவனமும் கண்ணி அகற்றும் பணியில்!

யாழ்ப்பாணம்,ஜூன்2

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் பிரெஞ்சு நிறுவனம் ஒன்றும் ஈடுபடவிருக்கின்றது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் அழைப்பை ஏற்று, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட நிஸாம் இன்ரநஷனல் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சாலிய அபயசேகர இத்தகவலைத் தெரிவித்தர்.

'உதயன்' அலுவலகத்துக்கு வருகை தந்த அவர், தமது நிறுவனத்தின் திட்டம் குறித்து விளக்கம் அளித்தார்.

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுமாறு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா விடுத்த கோரிக்கையை ஏற்றுள்ளோம். நிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் விவரங்கள் சமர்ப்பிக்கக் கோரிக்கை

கொழும்பு,ஜூன்2

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் வடக்கில் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் தொடர்பான விவரங்களை எதிர் வரும் 6ஆம் திகதி தம்மிடம் சமர்ப் பிக்கும்படி புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா வடபகுதி நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார்.

கடந்தவாரம் வடபகுதி நாடாளு மன்ற உறுப்பினர்களைச் சந்தித்த அமைச்சர், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள் ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட் டங்கள் குறித்து ஆராய்ந்தார்.

அபிவிருத்தித் திட்டங்களை விரை வாகச் சமர்ப்பிப்பதன்மூலம் அவற்றை வருட முடிவுக்குள் பூர்த்திசெய்ய முடியும் என்று அமைச்சர் அவர்க ளிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளு மன்றக் கட்டடத்தில் தம்மைச் சந் தித்து திட்டங்கள் தொடர்பான விவ ரங்களைச் சமர்ப்பிக்கும்படி அமைச் சர் எம்.பிக்களைக் கேட்டுள்ளார். (ஐ-3)

# தென்பகுதி வாகனத்தை கடத்திய நபர் சிக்கினார்!

## கிளிநொச்சி நகரில் சம்பவம்

கிளிநொச்சி,ஜூன்2

கிளிநொச்சி நகரப் பகுதியில் தரித்து நின்ற சமயம் திருடிச் செல் லப்பட்ட 'டொல்பின்' ரக வாகனம் ஒன்று திருடப்பட்டு ஒரு சில மணி நேரங்களில் தமிழீழ காவல்துறை யினரால் மீட்கப்பட்டது. வாகனத் தைத் திருடிச் சென்ற நபரும் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி இடம் பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

தென்பகுதியில் இருந்து யாழ்ப் பாணத்துக்கு வந்த மேற்படி வாக னம் மீண்டும் கொழும்புக்கு திரும்பிச் செல்லும்போது வழியில் கிளி நொச்சி நகரப் பகுதியில் தரித்து நின் றது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறிப்பிட்ட வாகனத்தை நபர் ஒருவர் திருடிச் சென்றுள்ளார். இது தொடர் பாக தமிழீழ காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும்-

உடனடியாக நடவடிக்கை எடுத்த காவல்துறையினர் சுமார் 4மணி நேரத் துக்குள் குறிப்பிட்ட வாகனத்தை மீட் டதுடன் வாகனத்தைத் திருடிய வரையும் கைது செய்தனர்.

பிரஸ்தாப நபர் கிளிநொச்சியில் இயங்கும் தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். குறிப்பிட்ட வாகன மும் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு உரிய முறைப்படி வாகன உரிமை யாளரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த வாகனத்தை மீண்டும் கொழும்புக்கு வாகன உரிமையாளர் பத்திரமாக எடுத்துச்சென்றார். (ஐ-6)

### அகதிகள் விடயம் பற்றி ஆராய

# அமைச்சர் ஜயலத் தமிழகம் செல்வார்

கொழும்பு,ஜூன்2

தமிழகத்தில் தஞ்சம் அடைந் துள்ள ஈழ அகதிகளை பத்திரமாக இலங்கைக்குத் திருப்பி அழைத்து வருவது தொடர்பாக ஆராய்வதற் காக இம்மாத நடுப் பகுதியில் தமி ழகம் செல்லவிருப்பதாக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தெரி வித்தார்.

தமிழகத்தில் தங்கியுள்ள அகதி களில் பெரும்பாலானவர்கள் இலங்கை திரும்பி அவர்களது சொந்த இடங் களில் மீளக்குடியமர விருப்பம் தெரி வித்துள்ளனர் என்றும் -

அவர்களைப் பத்திரமாக அழைத்து வந்து குடியமர்த்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது என்றும் -

அவர் தெரிவித்தார்.

அகதிகள் நல்லமுறையில் பரா மரிக்கப்படுவதில்லை எனப் பல முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என் றும் -

இது விடயமாக தமிழக முதல் வர் செல்வி ஜெயலலிதா, பொலீஸ் ஆணையாளர், உயர் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடவிருக் கின்றேன் என்றும் -

அமைச்சர் மேலும் கூறினார்.(ஐ-3)

## கருத்தரங்கு

வலிகாமம் கல்வி வலய பாட சாலைகளில் உடற்கல்வியும் சுகா தாரமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான தொடருறு கல்விக் கருத் தரங்கு நாளையும், நாளைமறுதின மும் பின்னர் இம்மாதம் 12ஆம், 17 ஆம் திகதிகளிலும் மானிப்பாய் இந் துக்கல்லூரி ஆசிரியர் நிலையத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் கலந்துகொள்வோர் உடற்கல்வி செயல் முறையில் அணிவதற்கான உடை களைக் கொண்டுவருமாறும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ம-152)

# 'மிற்சுயி' சிமெந்து நிறுவன அதிகாரிகள் குழு யாழில்

யாழ்ப்பாணம்,ஜூன்2

'மிற்சுயி' சிமெந்து நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

நேற்றுப் பகல் வருகைதந்த இக் குழுவினர் மாலை யாழ்.ப.நோ.கூ. சங்கக் கேட்போர் கூடத்தில் ஒன்று கூடல் ஒன்றை நடத்தினார்கள்.

இந்த ஒன்றுகூடலில் சிமெந்து விற்பனை முகவர்கள் மற்றும் கட் டட ஒப்பந்தகாரர்கள் கலந்துகொண் டனர். இந்த ஒன்றுகூடலில் 'மிற்சுயி' சிமெந்தின் தரம் பற்றியும் அதன் தொழில்நுட்ப மற்றும் பாவனை பற்றி யும் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் மௌலி குணரட்ண எடுத்துக் கூறினார்.

மிற்சுயி நிறுவனத்தின் முகாமை யாளர் எஸ்.ரவீந்திரகுமார், சந்தைப் படுத்தல் முகாமையாளர் றொகான் அபயசேகர ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (எ-10-4)

### ஆத்மீகப் பயணத்தை மேற்கொண்டு

# தமிழக அறிஞர்கள் ஐவர் நேற்று யாழ். வந்துசேர்ந்தனர்

யாழ்ப்பாணம்,ஜூன்2

தமிழ்நாட்டிலிருந்து ஆத்மீகப் பயணத்தை மேற்கொண்டு உலகத் தமிழ் நூலக அறக்கட்டளைத் தலை வர் புலவர் தமிழப்பன் தலைமை யில் ஐவர் கொண்ட குழு ஒன்று யாழ். வருகை தந்துள்ளது.

தமிழறிஞர்களான கருணைதாசன் (மதுரை), குரு ஆறுமுகம்(சேலம்), துரை இராமநாதன் (சென்னை), ந. கணேசன்(புதுவை) ஆகியோர் இந் தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 4ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவர்கள் இன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்வதுடன் தொடர்ந்து யாழ்.சைவ பரிபாலன சபையின் ஏற் பாட்டில் நடைபெறும் பல்வேறு ஆத் மீக நிகழ்வுகளிலும் கலந்துகொள் வர். (எ-9)

## மாநகர சபை தொழிலாளர் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜூன்2

நிர்வாக உத்தியோகத்தரை உட னடியாக இடமாற்றவேண்டும் என்பது உட்பட ஏழு கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.மாநகரசபை ஐக்கிய ஸ்தல ஸ்தாபன தொழிலாளர்கள் மேற்கொண்டுவரும் மறியற் போராட் டம் இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

இதனால் மாநகர சபைப் பகுதி யில் சுத்திகரிப்புப் பணிகள் எதுவும் கடந்த இரு தினங்களாக நடைபெற வில்லை. இன்று விடுமுறை தினம் என்பதால் தமது போராட்டம் இடம் பெறமாட்டாது என்றும் -

நாளை திங்கட்கிழமை வழமை போல் மீண்டும் மறியல்போராட்டம் இடம்பெறும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை -

வேலைநிறுத்தப் போராட்டத்தை நிறுத்திவிட்டுத் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பவேண்டும் என்றும்-

அவ்வாறு பணிக்குத் திரும்பா மல் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடு பட்டால் புதிய தொழிலாளர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் படுவர் எனவும் மாநகர முதல்வர் செ. கந்தையன் அறிவித்துள்ளார். (எ-10-8-51)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி,ஜூன்2

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு மண்டுவில் கண்ணகை (சோலை அம் மன்) அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமும் காவடி விழா வும்' நாளை திங்கள் காலை 10மணி தொடக்கம் தொடர்ந்து நடைபெறவுள் ளது.

காவடிகள் வெவ்வேறு ஆலயங் களில் இருந்து பிற்பகல் வரை ஆல யத்தை வந்தடையும் எனவும் தொடர்ந்து இரவு பொங்கல் நிகழ்வு கள் இடம்பெறும் எனவும் ஆலய பிர தமகுரு கூறினார். (ம-51)

★ ★ ★

தென்மராட்சி,ஜூன்2

சாவகச்சேரி வடக்கு இலுவம் செல்வவிநாயகர் ஆலய பிராயச்சித்த அபிஷேகம் இன்று நடைபெறும். (ம-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழ கம் யாழ்.இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற் றுப்போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு :-

★ காலை 8.30 மணி - கால் இறுதி ஆட்டம் - ஜொலிஸ்ரார் வி.க. எதிர் பற்றீஸியன் வி.க.

★ நண்பகல் ஒரு மணி - அரை யிறுதி ஆட்டம் - சென்ரல் வி.க. எதிர் பல்கலைக்கழக வி.க. (எ-3)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட் பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை நடை பெறும் ஆட்டத்தில் நெல்லியடி சுடர் ஒளி வி.கழகத்தை எதிர்த்து கரண வாய் மத்தி வி.கழகம் மோதவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

கிளிநொச்சி,ஜூன்2

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார், வன்னி மாவட்ட காளை மாடுகள் பங்குபற்றும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு வட்டக் கச்சி கலைவாணி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வடமாகாண காளை மாடு கள் பங்குபற்றும் போட்டியாக இது நடைபெறவுள்ளது. (எ-6)



ஜப்பான் தென்கொரியா

## உலகக் கிண்ண காற்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.02 - 30.06.02



டென்மார்க் அணி வீரர் மார்ட்டின் லூஸல் (வலது) மற்றும் உருகுவே வீரர் டாரியோ சில்வா ஆகியோர் பந்துக்காக மோதும் காட்சிகள்.

# 8-0 கோல் அடிப்படையில் வென்று ஜேர்மன் சாதனை!

பெய்ஜிங்,ஜூன்2

உலகக் கிண்ண உதைபந்தாட் டப் போட்டிகளின் நேற்றைய ஆட் டங்களில், ஒன்றில் ஜேர்மனி 8-0 என்ற கோல் அடிப்படையில் சவூதி அரேபிய அணியை வென்று சாதனை படைத்துள்ளது. மற்றைய இரு ஆட் டங்களில் ஒன்றில் டென்மார்க் அணி வெற்றி பெற்றது. ஐரிஷ் மற்றும் கெமரூன் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நேற்றைய முதலாவது போட்டி ஜப்பானின் நிஹாட்டா மைதானத் தில் இடம்பெற்றது. ஐரிஷ் அணியை எதிர்த்து கெமரூன் அணி போட்டி யிட்டது. ஆட்டம் ஆரம்பமான 39 ஆவது நிமிடத்தில் கெமரூன் அணி வீரர் பற்றிக் மூமா முதலாவது கோலை அடித்தார்.

பதிலுக்கு ஆட்டத்தின் இரண்டா வது பாதியில் ஐரிஷ் அணி வீரர் மாத்யூ ஹோல்டன் தனது அணி சார் பில் ஒரு கோலை அடித்தார். இறுதி யில் போட்டி 1-1 என்ற கோல் அடிப் படையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இரண்டாவது ஆட்டம் தென் கொரியாவில் நடந்தது. டென்மார்க் மற்றும் உருகுவே அணிகள் மோதின. இந்தப் போட்டியில் டென்மார்க் அணி 2-1 என்ற கோல் அடிப்படையில் உருகுவே அணியைத் தோற்கடித் தது.

ஆட்டத்தின் முதல் பாதி முடி வடைவதற்கு சற்று முன்னதாக டென்மார்க் அணி வீரர் ஜோன் டால் தொம்சன் முதலாவது கோலை அடித்தார். பதிலடியாக சில நிமிடங் களில் உருகுவே அணி வீரர் டாரியோ றொட்றிகுயிஸ் தன் சொந்த முயற் சியில் ஓர் அற்புதமான கோலை அடித்தார். இதனால் இரு அணிக ளும் சமநிலையடைந்தன.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி யில் டென்மார்க் வீரர் ஜோன் டால் தொம்ஸன் மீண்டும் ஒரு கோலை அடித்து தனது அணிக்கு வெற்றி யைத் தேடிக் கொடுத்தார்.

மூன்றாவது ஆட்டம் ஜப்பானின் ஸப்போரா மைதானத்தில் இடம் பெற்றது. ஜேர்மனி மற்றும் சவூதி அரேபிய அணிகள் மோதின. இதில் 8-0 என்ற அடிப்படையில் ஜேர்மனி பெரு வெற்றியீட்டியது. அந்த அணி யில் மிரோசல்வ் கோல்ஸ் 3 கோல் களை அடித்து ஹற்றிக் சாதனை நிகழ்த்தியுள்ளார். ஆட்டத்தின் முதல் பாதியில் 2 கோல்களையும் மற்றைய பாதியில் ஒரு கோலையும் அவர் அடித்தார். முதலாவது கோல், ஆட் டம் ஆரம்பமான 20ஆவது நிமி டத்தில் பெறப்பட்டது. தொடர்ந்து 25, 40, 45, 69, 73, 84, 90 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல் கள் அடிக்கப்பட்டன.

ஜேர்மன் அணியின் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் சவூதி அணி சுருண்டது. (ம)

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

உலகக் கிண்ண உதைபந்தாட் டப் போட்டிகளில் இன்று நடை பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம் (உள்ளூர் நேரம்) என் பன வருமாறு:-

★ பராகுவே எதிர் தென்னா பிரிக்கா (கொரியா - பி.ப. 1.30மணி)

★ ஆர்ஜென்ரீனா எதிர் நைஜீ ரியா (ஜப்பான் - பகல் 11.30 மணி)

★ பிரிட்டன் எதிர் சுவீடன் (ஜப் பான் - பி.ப. 3.30 மணி)

★ ஸ்பெயின் எதிர் ஸ்லோ வேனியா (ஜப்பான் - 5.30 பி.ப.) (ம)



ஹற்றிக் சாதனை நிகழ்த்திய மிரோசல்வ் கோல்ஸ் (வலது)

# போர்ப் பதற்றம் அதிகரிக்கிறது
# பாக். மற்றும் இந்தியாவில் உள்ள பணியாளரை அழைக்க ஐ.நா. முடிவு

## பாகிஸ்தானில் பத்து வயது மகளுடன் இந்தியர் கடத்தல்!

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரக ஊழியர் ஒருவரை அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் கடத்திச் சென்றுள்ளனர்.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள தூதரக அலுவலகத்தில் இருந்து தனது பத்து வயது மகளுடன் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபொழுது சில நபர்கள் அவரையும் மகளையும் வழிமறித்துக் கடத்திச் சென்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-9)

## மேற்குலக நாடுகளும் அத்தகைய நடவடிக்கை

லண்டன்,ஜூன்2

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர்ப்பதற்றம் அதிகரித்து வருவதையடுத்து இந்த இரு நாடுகளிலும் இருந்து தனது பணியாளர் குடும்பங்களை வெளியேற்ற ஐ.நா. சபை முடிவுசெய்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. பிரிட்டன், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளும் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள தத்தமது குடிமக்களுக்கும், இராஜதந்திர அதிகாரிகளுக்கும் இத்தகைய அறிவுறுத்தலை வழங்கியுள்ளன.**

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் இருதரப்புப் படைகளும் மேற்கொண்டுவரும் பரஸ்பரம ஷெல், மோட்டார் மற்றும் துப்பாக்கித் தாக்குதல்கள் - வெளிநாடுகளின் சமாதான முயற்சிகளின் மத்தியிலும் - நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் எப்போது வேண்டுமானாலும் அணு ஆயுதங்களைத் தம்வசம் வைத்துள்ள இந்த இரு நாடுகளிடையேயும் யுத்தம் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் 'பிரச்சினையில் பின்வாங்கப் போவதில்லை' என்று எச்சரிக்கை விடுத்ததையடுத்தே, வெளிநாட்டவரை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கு நாடுகளும், ஐ.நாவும் மேற்கொண்டுள்ளன.

நேற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டுப் பகுதியில் இரு நாட்டுப் படைகளும் மோட்டார் குண்டுகளையும், இயந்திரத் துப்பாக்கிகளையும் பயன்படுத்திப் பரஸ்பரம் கடும் தாக்குதலை நடத்தின.

இதற்கிடையில், இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில், தீவிரவாதிகள் நடத்திய கிரனேட் தாக்குதலில், ஒருவா கொல்லப்பட்டதுடன் 13பேர் காயமடைநதனர். இத்தகைய தீவிரவாதத தாக்குதல்களாலேயே நிலைமை மேலும் மோசமாகி வருகிறது.

இதனாலேயே, பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, டென்மார்க், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகள் தமது குடிமக்களை இந்தியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ செல்லவேண்டாமென்றும், அங்கு தங்கியிருப்பவர்களை வெளியேறுமாறும் கோரியுள்ளனர்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே அணு ஆயுதப் போர் மூண்டால் 90லட்சம் முதல் ஒரு கோடி 20 லட்சம் பேர்வரை உயிரிழக்க நேரிடும் என்றும் -

உலக அரங்கில்

போரின் தாக்கத்தால் தொடர்ந்து பல வருடங்கள் மேலும் பல லட்சக் கணக்கானோர் உடல் பாதிப்புக்களை எதிர்கொள்வர் என்றும் -

அமெரிக்கப் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)



இந்தியாவுடன் போர் தொடுக்கும்படி வலியுறுத்தி இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தானியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது எடுத்த படம். தமது இராணுவத்தின் பலமாக அவர்கள் கருதும் ஏவுகணைகளின் மாதிரியை கையிலேந்தியுள்ளனர்.

## இந்தியாவில் உள்ள தூதரகத்தை மூடிவிட அமெரிக்க அரசு முடிவு!

வாஷிங்ரன்,ஜூன்2

போர்ப் பதற்றம் காரணமாக இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள தனது தூதரக அதிகாரிகளை திருப்பி அழைக்க அமெரிக்க தீமானித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்நேரமும் போர் மூளலாம் என்ற அபாயகரமான நிலைமை நிலவுவதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் எப்போது வேண்டுமானாலும் இந்தியாவிலிருந்து புறப்படத் தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள தனது குடிமக்களையும் அங்கிருந்து வெளியேறிவிடும்படி அமெரிக்கா கேட்டுள்ளது. அமெரிக்கர்கள் எவராவது இந்தியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ பயணம் செய்யத் திட்டமிட்டிருந்தால், அந்தப் பயணத்தை தள்ளிப்போடும்படியும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது சுமார் 60 ஆயிரம் அமெரிக்கக் குடிமக்கள் இந்தியாவிலும் சில ஆயிரம் பேர் பாகிஸ்தானிலும் உள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ரிச்சேர்ட் பௌச்சர் தெரிவித்தார். (ஒ)

## கொலம்பியாவில் அமைதிப் பேச்சு முறிந்தது

கொலம்பியாவில் இரண்டாவது பெரிய தீவிரவாத இயக்கமான தேசிய விடுதலை இராணுவத்துடனான சமாதானப் பேச்சை அந்நாட்டு அரசு முறித்துக்கொண்டது.

சமாதானத்தைத் தீவிரவாதிகள் விரும்புவதாகத் தெரியாததாலேயே பேச்சை நிறுத்திவிட்டதாக கொலம்பிய அதிபர் பஸ்ட்ரானா தெரிவித்தார்.

(ஒ)

## அமெரிக்க இராணுவம் சுட்டு 3 ஆப்கான் படையினர் பலி!
### தவறுதலாக நடந்ததாம்

காபூல்,ஜூன்2

ஆப்கானிஸ்தானில் தம்முடன் இணைந்து பணியாற்றிய ஆப்கான் படை வீரர்கள் மூவரை தவறுதலாக அமெரிக்க இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுவிட்டனர். இதில் ஆப்கான் படையைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். இதனை அமெரிக்க இராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.

அல்கெய்டா மற்றும் தலிபான் போராளிகள் பெருமளவில் மறைந்துள்ளதாகக் கூறப்படும் கிழக்கு ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க இராணுவப் பேச்சாளர் லெப்ரினன்ட் பிரான் முமரிமான் கூறுகையில் -

அமெரிக்கச் சிறப்பு அதிரடிப்படையின் ஒரு குழுவினர் இரவுநேரக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்ததாகவும் -

அப்போது அடையாளம் தெரியாத ஒருவர் 'றொக்கட்' செலுத்தியை அமெரிக்கப் படையின் திசை நோக்கிக் குறி பார்த்ததாகவும் -

இதனால் பீதியடைந்த அமெரிக்கப் படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

தெரிவித்தார்.

பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்தியபோது, ஆப்கானின் தேசிய இராணுவப் படையைச் சேர்ந்த மூன்று வீரர்கள் உயிரிழந்தும், இருவர் காயமடைந்தும் கிடந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## மேற்குக்கரைப் பகுதிகளில் இஸ்ரேல் புதிய ஆக்கிரமிப்பு!

பெத்தலகேம்,ஜூன்2

மேற்குக் கரையின் பலஸ்தீனப் பகுதிகள் மீது இஸ்ரேலிய இராணுவம் புதிதாக ஆரம்பித்துள்ள தாக்குதல்களில் சமீபத்திய நடவடிக்கையாக நேற்று பெத்தலகேம் மற்றும் துல்க்ராம் நகரங்களுக்குள் அவை நுழைந்தன.



நப்லஸில் பலஸ்தீனர்கள் கைதுசெய்யப்பட்ட காட்சி.

முன்னதாக நேற்றுமுன்தினம் நப்லஸ் நகரைச் சுற்றிவளைத்த இஸ்ரேலிய இராணுவம், நூற்றுக் கணக்கான பலஸ்தீனரை அவர்களது இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றி சோதனையிட்டு அவர்களில் பலரைக் கைதுசெய்தது.

ஒரு உடன்பாட்டுக்கோ அல்லது அரசியல் தீர்வுக்கோ இஸ்ரேல் வரத் தயாரில்லை என்பதையே அதன் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் உலக நாடுகளுக்கு நிரூபிப்பதாக பலஸ்தீனத தலைவர் யஸீர் அரபாத் தெரிவித்தார்.

இதற்கிடையில் தொடரும் சமாதான முயற்சியில் ஒரு கட்டமாக அமெரிக்கத் தூதர் வில்லியம் பேர்ன்ஸ், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். அந்தப் பேச்சின்போது அமைதித் தீர்வுக்கான பேச்சு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக பலஸ்தீனர்களின் தீவிரவாதத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என ஷெரோன் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

பலஸ்தீன தீவிரவாத இயக்கமான அல் அகுஸா மார்ரியர்ஸ் படையணி பொறுப்பேற்ற தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களில் இஸ்ரேலியர்கள் பலர் உயிரிழந்ததையடுத்தே தற்போதைய இராணுவ நடவடிக்கையை இஸ்ரேலியப் படையினர் ஆரம்பித்தனர்.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி, துல்க்ராம் அருகேயுள்ள இரு பலஸ்தீன அகதி முகாம்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள இஸ்ரேலியப் படையினர், அப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளனர். பெத்தலகேமில் 'டெய்ஷா' அகதிமுகாமை டாங்கிகள் சகிதம் சுற்றிவளைத்த இஸ்ரேலியத் துருப்பினர், பல பலஸ்தீனர்களைக் கைதுசெய்துள்ளனர்.(ஒ)

## யானைகளைக் காப்பாற்ற தாய்லாந்தில் புதிய திட்டம்

பாங்கொங்,ஜூன்2

தாய்லாந்தில் யானைகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருவதால், அதனைத் தடுக்க புதிய திட்டத்தை தாய்லாந்தின் விலங்கியல் நிபுணர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி ஆண் யானைகளின் உயிரணுவை சேகரித்து அதனைப் பயன்படுத்தி காட்டில் உள்ள பெண் யானைகளை குட்டிபோட வைக்கும் முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

தாய்லாந்து துணை விவசாய அமைச்சர் பிர்பாத் பனியாவ் சத்ரக்ஷா இதனைத் தெரிவித்தார்.

ஆயுத்யா மாகாணத்தில் யானை உயிரணு வங்கி செயற்படுகிறது. அரசு சார்பற்ற இந்த வங்கி உலகில் முதல் முறையாக யானைகளின் உயிரணுவுக்கு அமைக்கப்பட்ட வங்கி என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ)

## மதநம்பிக்கை காரணமாக பணி இழந்த மருத்துவதாதி
### அமெரிக்காவில் சம்பவம்

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஜூன்2

அமெரிக்காவில் மதநம்பிக்கையைக் காரணம் காட்டி கருத்தடை மாத்திரைகளை விநியோகிக்க மறுத்த மருத்துவத் தாதியை பணிநீக்கம் செய்தமை தவறு என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

'ரிவர்செட் கவுன்டி' என்ற இடத்தில் உள்ள மருத்துவ மனையில் மருத்துவத் தாதியாகப் பணியாற்றியவர் மிச்சிலிடயஸ் (வயது 28). இவர் பணியாற்றிய மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் பெண் நோயாளிகளுக்கு கருத்தடை மாத்திரைகள் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் மிச்சிலி கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவது தனது மத நம்பிக்கைகளுக்கு எதிரானது என்று கூறி அவற்றை விநியோகிக்க மறுத்து விட்டார்.

இதனால் மருத்துவமனை நிர்வாகம் மிச்சிலியை பணிநீக்கம் செய்தது. இதனை எதிர்த்து மிச்சிலி தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிபதி மிச்சிலியை பணிநீக்கம் செய்தது தவறென்று தெரிவித்ததுடன், அவருக்கு 47 ஆயிரம் டொலர்கள் நஷ்டஈடு வழங்கும்படி மருத்துவமனை நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார்.

(ஒ)

# ரணில் - சந்திரிகா பலப்பரீட்சைக்கு திடீர் தேர்தல் ஒன்றுதான் பரிகாரமா?

## சமாதானத்திற்கு ஏற்பட்ட பெரிய சோதனை

இலங்கையின் அரசியல் சூழல், தற்போது முன்னரைவிட வித்தியாச மாக இருக்கிறது.

அதாவது, நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதி ஒரு கட்சியைச சேர்ந்தவராக இருக்கிறார். நாடாளுமன் றத்தின் பெரும்பான்மை பிரிதொரு கட்சியிடம் இருக்கிறது.

பொதுவாகக் கூறுவதானால் இந் நாட்டின் நிர்வாக அதிகாரத்தில் இரு பெரும் கட்சிகளும் தற்சமயம் பங் கேற்றுள்ளன.

இதனால், அரசியல் கொள்கை கள், அதிகாரங்கள் ஆகியவற்றில் பலப்பரீட்சை நிலவுகிறது.

விசேடமாக, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

இந்த உடன்படிக்கை சம்பந்தமாக வும், அதனைத் தொடர்ந்து இடம் பெறுகின்ற சமூக நிலை சம்பந்தமா கவும் ஒரு பகுதியினர் மத்தியில் கருத்து முரண்பாடுகள் காணப்படு கின்றன.

### - காதிகா -

அரசாங்கத்தின் சமாதான முயற் சிகளுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகின்றனர்.

இவர்களின் தோலை உரிக்க வேண்டும் என ஜனாதிபதி கூறியி ருக்கின்றார்.

ஆனால், ஜனாதிபதி அரசாங்கத் தின் மந்திரி சபை உறுப்பினராக இருக்கிறார் என்பதை மறந்துவிட்டார்.

இத்தகைய சூழலில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒரு வருடத்திற் குப் பின்னர் கலைத்தால் என்ன நடக் கும்?

கடந்த நாடாளுமன்றம் கூட ஒரு வருடத்தில் கலைக்கப்பட்டது.

இந்நிலையில் அரசியல் சீர்திருத் தங்களை மேற்கொள்ளும் முகமாக அரசமைப்புச் சட்டத்திற்குக் கொண்டு வரப்படும் 18ஆவது திருத்தம் பற்றிய முழு விவரங்களும் வெளியிடப்பட் டுள்ளன.

சமாதான முயற்சிக்கு நாடாளு மன்றம் மிக முக்கியமானதாகும்.

எனவே, ஜனாதிபதியின் நாடாளு மன்றத்தைக் கலைக்கும் அதிகாரத் திற்கு வேட்டு ஏற்படுத்தவேண்டும்.

பதவி பறிபோகாமல் எம்.பிக்கள் கட்சி மாறி வாக்களிக்க வசதி செய்து கொடுக்கப்படும். ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் அனைத்தும் ஒழிக்கப்படும்.

- இவ்வாறு பல அம்சங்கள் கொண்ட அரசமைப்புச் சீர்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் படவேண்டும்.

### சட்டம் நிறைவேறாது

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சிகளான பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் எதிர்த்து வாக்களித்தால் அரசியல் அமைப்புச் சட்டம் நிறை வேறமாட்டாது.

அரசுக்கு இது நன்றாகத் தெரி யும். அப்படி ஒரு தோல்வியை அரசு சந்திக்க விரும்புவதும் இல்லை.

ஆயினும் அரசு, மூன்றில் இரண்டு பங்கு வாக்கைப் பெறவேண்டும் என் பதில் நம்பிக்கையாக இருக்கிறது.

இலங்கை அரசியல் அமைப்பின் 38ஆவது உறுப்புரைச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றமனுப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர லாம். இதனை சபாநாயகரிடம் கைய ளிக்கலாம்.

சபாநாயகர் இதனை ஏற்றுக்கொண் டால், அதன் பின்னர் உயர்நீதிமன் றத்தில் விசாரணைகள் நடைபெற்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்.

குற்றமனுவில் உள்ள ஏதாவது குற்றச்சாட்டின்படி ஜனாதிபதி குற்ற வாளியாகக் காணப்பட்டால் அது பற்றி உயர் நீதிமன்றம் நாடாளுமன் றத்திற்கு அறிவிக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வாக் களித்தால் ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றமுடியும். இந்நட வடிக்கை மிகவும் தொல்லைகள் நிறைந்தது. அதுபோல் காலதாமத மும் அதிகம் எடுக்கும்.

ஆனால், அத்தகைய ஒரு குற்ற மனுப் பிரேரணையை சபாநாயகருக்கு அரசு கையளித்து, சபாநாயகர் அதனை விசாரணைக்கு ஏற்றுக்கொண் டால் உயர் நீதிமன்றத்தின் அறிக்கை வரும்வரை ஜனாதிபதியால் நாடாளு மன்றத்தைக் கலைக்கமுடியாது.

### மனச்சாட்சிப்படி வாக்களிப்பு

தற்போது நடைபெறும் புரிந்து ணர்வு உடன்படிக்கையும், எதிர்காலத் தில் நடைபெறப்போகும் இடைக்கால நிர்வாகசபையும் பற்றி உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் நலன்கருதி மனச்சாட்சிப்படி வாக்க ளிக்க இடமிருக்கவேண்டும்.

சமாதானம் நிலைக்கவேண்டும் என்பதற்கு ஆதரவாக மக்களின் கருத்து அதிகரித்துவருகின்ற இவ் வேளையில் மக்கள் பிரதிநிதிகள் தமது கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் சிக் குண்டு நாட்டில் சமாதானத்தை முறி யடிக்கக் கூடாது.

ஆகவே, அவர்கள் மனச்சாட்சிப் படி வாக்களிக்க அவர்களுக்கு இட மளிக்கவேண்டும்.

அரசுக்கும் - ஜனாதிபதி தலை மையிலான பொ.ஐ.மு. மற்றும் ஜே. வி.பிக்கும் இடையே உள்ள மற்று மொரு கயிறிழுப்பு, புலிகள் இயக் கம் மீதான தடைநீக்கமாகும்.

புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க அரசு விரும்புகிறது. ஆனால், ஜனாதிபதியும ஏனைய கட் சியினரும் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை பேச்சுக்கு முன்னர் நக்கக்கூடாது எனக்கூறி வருகின்றனா.

பேச்சின் முன்னேற்றத்தைப் பார்த் துத் தடையை நீக்கவேண்டும் என் றும் வலியுறுத்திக் கூறிவருகின்றனர்.

இதேவேளை -

விடுதலைப் புலிகள் இயக்கம், பேச்சு இடம்பெறவேண்டுமானால் தம் மீதுள்ள தடை நீக்கப்பட்டு தாமும் பேச்சில் சமமான நிலையில் இருக்க வேண்டுமெனத் தெரிவித்திருக்கிறது.

### திடீர்த் தேர்தல்

இதற்கிடையில், இவ்வாண்டு டிசெம் பர் மாதத்திற்கு முன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்து பிர தமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோ சனை செய்துவருகிறார் என்று செய் தியொன்று வெளியாகியது.

ஐ.தே.மு. அரசை ஜனாதிபதி பதவிநீக்கம் செய்வதற்கு அல்லது கலைத்துவிடுவதற்கு எண்ணியிருக் கலாம்.

இதற்கு முன்னர் அவரின் அதி காரங்களைக் குறைத்து, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத் தைப் பெறுவதே, இத்திடீர்த் தேர் தல் நடத்தப்படுவதன் நோக்கமாகும் எனக் கூறப்படுகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஒரு நாடாளுமன்றம் தெரிவுசெய்யப் பட்டு ஓர் ஆண்டு முடிவடைந்ததும் எந்நேரத்தில் வேண்டுமானாலும் ஜனா திபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து விடமுடியும்.

### பிரதமரின் ஆலோசனை

இந்நிலையில் தேர்தலை முன் கூட்டியே நடத்தி, அதிகப்படியான பெரும்பான்மையுடன் ஆட்சியை மீண் டும் கைப்பற்றுவதற்கு பிரதமர் ஆலோ சனை நடத்திவருகிறார் என்று தெரி விக்கப்பட்டது.

அவ்விதம் ஆட்சியைக் கைப் பற்றுவதன்மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச செய்யமுடியும் என பிரதமர் ஆலோ சித்து வருகிறார் என ஊகம் தெரி விக்கப்படுகிறது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர் அல்லது அரசை பதவி நீக்கம் செய்வதற்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்பதே பிரதமரின் விருப் பமாக இருக்கிறது.

நாடாளுமன்றத்தைக் கலைப்ப தற்கு முன்னால் வேறு எந்தவோர் உறுப்பினரையும் புதிய அரசை அமைக்குமாறு அழைப்பு விடுக்கும் அதிகாரம் அரசியல் அமைப்பு ரீதி யாக ஜனாதிபதிக்கு உண்டு.

புதிய அரசைப் பொறுப்பேற்பவர் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப் பவராக இருக்கவேண்டும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை அந்த அடிப்படையில் ஸ்திரம் அற்ற தொன்றாக இருப்பதாக பிரதமர் கரு துகிறார்.

சமாதான நடவடிக்கைகள் மற் றும் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத் திற்கும் உள்ள அதிகாரங்கள் போன்ற முக்கியமான விவகாரங்களில் பிரத மருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கடுமையான வேறுபாடுகள் காணப் படுகின்றன.

இனப்பிரச்சினை உட்பட, பல தேசிய பிரச்சினைகள் தொடர்பாக தற்போது துணிகரமான நடவடிக்கை களை எடுக்கமுடியாது எனவும் பிர தமர் கருதியிருக்கிறார்.

இதேநேரம், இந்த அரசு பெரும் பான்மைப் பலத்துடன் இருக்கும்வரை, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதைத் தடுப்பதற்கான சட்ட மூலத்திருத்தத்தைக் கொண்டுவரப் போவதாகவும் ஐ.தே.மு. அரசு தெரி வித்திருக்கிறது.

ஆனால், இந்த உத்தேச சட்ட மூலத்திருத்தத்தை சபையில் கொண்டு வந்து நிறைவேற்ற, மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை.

அதற்குப் பிரதான எதிர்க்கட்சி யான பொ.ஐ.மு. இடமிருந்தே ஆத ரவு கிடைக்கவேண்டும்.

ஆனால், இதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்படுவதால் பொதுத் தேர்தலை எதிர்வரும் டிசெம் பர் மாதத்திற்கு முன் நடத்தி, மக் கள ஆணையைப் பெறமுடியுமா என் பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தற்சமயம் பரிசீலித்து வருகி றார் என்று ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர். ●


### தவறிவிட்டன

சண்முகவேல் ஆனந்தராஜா என்பவருடைய தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை, சாரதி அனுமதி அட்டை போன்ற பல ஆவணங் கள் யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கஸ்தூரியார் வீதியில் உள்ள றொலெக்ஸ் பேக்கரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4426)

### சோடா வெற்றுப் போத்தல்கள்

கொக்காகோலா, பன்ரா, ஸ்பிறைற், போட்டல்லோ வெற்று சோடாப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும்.

*விவரங்களுக்கு:*

**சிற்றி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2901 (4430)


### 31ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் லோ.சற்குணரூபன்**

பூவுலகில் 03.12.1976 — விண்ணுலகில் 03.05.2002

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்."

ஜேம்ஸ் லோறன்ஸ் (குணமணி),
லோ.குணபாக்கியம்,
ஜீன் கில்டா, கில்பரூபன்.

*3ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (4416)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 01 - 1932



மறைவு 13 - 06 - 2001

**அமரா செல்லர் சின்னக்கிளி (கஸ்ரோ)**

*(முன்னாள் ஊழியர், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*

திதி:2002.06.02

உங்கள் நினைவுகளில் என்றென்றும் வாழ்ந்திடுவோம்.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சந்தை வீதி,*
*காங்கேசன்துறை.* (4412)


### பதவி வெற்றிடங்கள் (Vacancies)

☆ மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்கள்
(Electrical and Electronic Technicians).

தகைமைகள :- க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியும் குறைந்தது ஒருவருட முன் அனுபவத்துடன் ஆங் கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

☆ பயிலுநர் மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்கள்
(Trainee Electrical and Electronic Technicians)

தகைமைகள்: குறைந்தது க.பொ.த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி.

**தம்பி தொலைத் தொடர்பு.**
90,கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.:021 - 2040, 2504, 2823
தொலைநகல் இல.:021 - 2040
(4424)


## மரண அறிவித்தல்கள்

### செல்வி கந்தையா தங்கலட்சுமி (தங்கா)

தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவருமாகிய செல்வி கந்தையா தங்கலட்சுமி 22.05.2002 புதன்கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் கந்தையா - மகேஸ்வரி தம்பதிகளின் (பிரான்ஸ்) அன்பு மகளும் இராசலட்சுமி (கொழும்பு), முருகானந்தன் (பிரான்ஸ்), ஞானா னந்தன் (பிரான்ஸ்), மகாலட்சுமி (பிரான்ஸ்), கெஜானந்தன் (பிரான்ஸ்), ஜெயலட்சுமி (ஜேர்மனி), வனஜலட்சுமி (பிரான்ஸ்), யசோதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மநாதன் (கொழும்பு), ஜெகதீஸ் வரன் (பிரான்ஸ்), பரந்தாமன் (ஜேர்மனி), ரெட்ணவதி (பிரான்ஸ்), சுசி கலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2002) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.முத்துராசா
(மாமா).

*தச்சன்தோப்பு,*
*கைதடி.* (4420)

### செல்லப்பெருமாள் சிவராசபிள்ளை

*(ஓய்வுபெற்ற பிரதேச மீன்பிடி பரிசோதகர் D.F.I.)*

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பெருமாள் சிவராசபிள்ளை 31-05-2002 வெள்ளிக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (குத்தகைக்காரன்)- விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் மண்டைதீவு செல்லப் பெருமாள் தம்பதிகளின் அன்பு மகனும் ஓய்வுபெற்ற ஆசிரியை புவ னேஸ்வரி (நேசம்) அவர்களின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (கனடா), ஜெயக்குமார் (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), சிவசொரூபன் (கனடா), சந்திரவதனி (கனடா), பிறிந்தா (கனடா), யசோதரா (கனடா), யமுனா (ஆஸ்திரேலியா), இளங்கோ (லண்டன்) ஆகியோரின் தந்தையாரும் மகாலட்சுமி, தேவகி, சசிகலா, ஆறுமுகவடிவேல், வேணுகோபால், யோகநாதன், துகிந்தன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற வர்களான நடராசா, தியாகராசா, குணசிங்கராசா, பூரணம், பூமலர் ஆகியோரின் மைத்துனரும் பஞ்சாட்சரம், நடேசன் ஆகியோரின் சகல னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.06.2002) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.குணசிங்கராசா
(மைத்துனர்).

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (4425)

உதயன்

## இடைக்கால நிர்வாகம் கிடைக்குமா?

ஐரோப்பிய மண்ணில் காலடி வைத்ததோடு இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அந்த திருப்பம் வட, தென் துருவங்களாக இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் பிரதமரையும் நெருங்கிவரச் செய்துள்ளது.

போர் நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை, புலிகளின் தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம் போன்ற விடயங்களில் ஜனாதிபதியும் பிரதமரும் ஆளுக்காள் எதிர்மாறான கருத்துக்களையே கொண்டிருந்தனர்.

இப்போது அந்த நிலைமை படிப்படியாக மாறி இருவருக்குமிடையே கருத்து ஒற்றுமையும் நெருக்கமும் ஏற்பட்டு வருகின்றன.

குறிப்பாக இடைக்கால நிர்வாக விடயத்தில் அந்தக் கருத்தொற்றுமை தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி, அதைப் புலிகளிடம் ஒப்படைப்பது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வருமுன்னரே தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்து வந்தார்.

வடக்கு - கிழக்கு நிர்வாகத்தைப் பத்து வருடங்களுக்கு புலிகளிடம் விட்டுவிட வேண்டும் என்று ஆரம்பத்தில் யோசனை தெரிவித்தவர் முன்னாள் அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான அமரர் செளமிய மூர்த்தி தொண்டமான் ஆவார்.

அவருடைய அந்த யோசனையை அடியொற்றித்தான் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி, அதைப் புலிகளிடம் ஒப்படைப்பது என்று ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சியை அமைத்து, புலிகளுடன் யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்துகொண்ட பின்னர் சமாதானப் பேச்சு நோர்வேயின் அனுசரணையுடன் தாய்லாந்தில் நடைபெறும் என்று முடிவானதும் பிரதமர் என்ன சொன்னார்?

தாய்லாந்தில் இடம்பெறும் ஆரம்பப் பேச்சில் இடைக்கால நிர்வாகம் பற்றியே அலசி ஆராயப்படும் என்றார்.

ஜனாதிபதி இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். பிரச்சினை பற்றிய மூலாதார விடயங்களே முதலில் பேசப்படவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். ஜனாதிபதியின் கருத்தை ஆதரித்து பேரினவாதச் சகதியில் மூழ்கிப் போயிருக்கும் எதிர்க்கட்சிகள் பலமாகப் பிரசாரம் செய்தன.

விளைவு என்ன? பிரதமர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு விட்டார். தாய்லாந்தில் நடைபெற இருக்கும் முதற் கட்டப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலில் பிரச்சினை சம்பந்தப்பட்ட மூலாதார விடயங்களே சேர்க்கப்படும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதன்படி இடைக்கால நிர்வாக விவகாரம் பின்தள்ளப்பட்டுவிட்டது. அது அப்படியே கைவிடப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்குப் பிரதி உபகாரமாகப் போலும் ஜனாதிபதியும் புலித்தடையை நீக்குவது சம்பந்தமாகத் தாம் படியிறங்கி ஓர் அறிவிப்பை தனது செயலகம் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

மூலாதார விடயங்கள் பற்றிப் பேச்சு நடத்தி, அதன் முன்னேற்றத்தைப் பொறுத்தே புலித்தடையை நீக்குவது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்ற தமது முந்திய கருத்தை ஜனாதிபதி இப்போது மாற்றிக்கொண்டு விட்டார்.

புலிகள் கோருகிறபடி - பேச்சுவார்த்தைக்கு முன்னர் - தடையை நீக்குவது என்றால் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சரவைக்கு விடயத்தைச் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தடையை நீக்கலாம் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இடைக்கால நிர்வாகத்தில் ஜனாதிபதியின் விருப்பப்படி நடக்க, பிரதமர் முடிவு செய்ததும் ஜனாதிபதி புலித்தடை நீக்கத்தில் பிரதமருக்கு அனுசரணையாக தனது நிலையை மாற்றிக்கொண்டார்.

ஜனாதிபதியும் பிரதமரும் ஆளுக்காள் நெருங்கி வருவது நல்லதுதான். அப்படியே புலிகளும் நெருங்கி வந்தால் காரியம் ஆகும்; பிரச்சினை தீரும்; சமாதானம் மலரும்!

தமிழ் மக்களின் நலனுக்கும் தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கும் இடைக்கால நிர்வாகம் விரைவில் தமது கைக்கு வரவேண்டும் என்று புலிகள் விரும்புகிறார்கள். அது நடக்காது என்றால் எதற்கும் அவர்களின் ஒத்துழைப்பு அரசுக்குக் கிடைக்குமா?

சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கவேண்டும்.

# உடன்படிக்கையின் 100 நாள்; கொழும்பில் 3 நாள் கண்காட்சி

கொழும்பு,ஜூன்2

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 100 நாள்கள் நிறைவடைவதையிட்டு 'யுத்த நிறுத்தத்தின் உண்மைத் தோற்றம்' என்ற தலைப்பிலான மூன்று நாள் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் இந்தக் கண்காட்சி மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து இடம்பெறும். போர் மற்றும் சமாதானம் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் ஒளிநாடாக்கள் இக்கண்காட்சியில் இடம்பெறும்.

எதிர்காலத்தில் சமாதானத்தின் தேவையைப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரப்புவதே இந்தக் கண்காட்சியின் நோக்கம் என்று தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கிங்ஸிலி ரொட்றிக்கோ தெரிவித்தார். (ம)

# இலங்கையில் தளம் அமைக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்கிறது தூதரகம்

கொழும்பு,ஜூன்2

இலங்கையில் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்கா திட்டமிட்டு வருவதாக வெளியான செய்தியை அந்த நாடு அடியோடு மறுத்துள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையுடன் அமெரிக்கா ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது உண்மையே. அது வேறு ஓர் விடயம் சம்பந்தமானது. 56 நாடுகளுடன் இத்தகைய உடன்படிக்கைகளில் அமெரிக்கா கைச்சாத்திட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் கைச்சாத்திட இருக்கும் இந்த உடன்படிக்கை அவ்வளவு முக்கியம் வாய்ந்ததல்ல. இதனையே ஊடகங்கள் தவறாக விளங்கிக் கொண்டு செய்தி வெளியிட்டுள்ளன - என்றுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு உணவு எரிபொருள் மற்றும் சில உபகரணங்களை வழங்கும் நோக்குடனேயே இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட இருப்பதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# சிப்பாய் விடுதலை

யாழ்ப்பாணம்,ஜூன்2

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி மண்டைதீவுப் பகுதியில் பெண்ணொருவர்மீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாகத் தெரிவித்துப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

இவரது வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுக்கப்பட்ட சமயம் இவரை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றப் பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். நயினாதீவு நாகவிகாரைக்கு ஆயிரம் ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் அவர் பணித்தார்.

பாலியல் வல்லுறவு என்று வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருந்தபோதும் அவ்வாறு நடைபெற்றதற்கான சான்று ஏதும் இல்லை எனவும் - குறிப்பிட்ட சிப்பாய் மனநோய்க்கான சிகிச்சை பெற்று வருபவர் எனவும் -

மன்றில் பிரஸ்தாபிக்கப்பட்டதை அடுத்தே அவர் விடுதலை செய்யப்பட்டார். (ம-10-ரி)

# நாவற்குழி, கோவிலாக்கண்டியில் மீளக்குடியமர மக்கள் பின்னடிப்பு

தென்மராட்சி,ஜூன்2

நாவற்குழி, கோவிலாக்கண்டிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். இங்கு 25 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளபோதிலும், இப்பகுதி கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதனால் போதிய வருமானம் கிடைக்காது என்ற அச்சத்தில் அவர்களும் அங்கிருந்து வெளியேற முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கடல் பகுதியூடாக அரியாலை வரை படையினர் நீண்ட பாலத்தினை அமைத்து, பாலத்திற்கு அடியில் முட்கம்பி போட்டு, அதற்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்லவேண்டாமென அறிவுறுத்தியுள்ளனர்.

அப்பகுதியில் மீன்பிடிக்கச் செல்வோர் மீன் ஏதும் கிடைக்காத நிலையில் திரும்புவதாகவும் இதனால் போதிய வருமானம் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# நுணாவில் அமிர்தாம்பிகை பாடசாலை பொலீஸாரால் புனரமைக்கப்படுகிறது

தென்மராட்சி,ஜூன்2

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயக் கட்டடம் பொலீஸாரால் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டுவருகிறது.

கட்டடப் பொருள்கள் மற்றும் கட்டட வேலையாள்களைப் பொலீஸ திணைக்களம் வழங்கியுள்ளது. சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் மேற்பார்வையில் புனரமைப்பு வேலைகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைக் கூரை திருத்தவேலையும், சிமெந்து வேலைகளும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதால் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்புகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ம-117)

# கடலில் விழுந்த நண்பியை காக்க முயன்றவர் மூழ்கிப் பலி!

வாழைச்சேனை,ஜூன்2

படகிலிருந்து கடலில்வீழ்ந்த தனது நண்பியைக் காப்பாற்றக் கடலில் குதித்த ஒருவர் உயிரிழந்த துயரச் சம்பவம் பாசிக்குடாவில் இடம்பெற்றிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காத்தான்குடியைச் சேர்ந்த ஆதம் லெவ்வை தைமூர் (வயது 24) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இது பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த வியாழனன்று காலை பதியத்தலாவை, கலன்வத்தயாய எனுமிடத்தைச் சேர்ந்த எட்டு சிங்கள இனத்தவரும், இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் பாசிக்குடாக் கடலில் குளித்துக் கொண்டிருந்தனர். இவர்களில் மூவர் சிங்கள யுவதிகளாவர். இக்குழுவினர் தனியார் படகில் ஏறி கடலை வலம் வரும்போது கே.எல்.சுஜிவவசந்தி என்ற யுவதி தவறிக் கடலில் வீழ்ந்துள்ளார். இவரைக் காப்பாற்றுவதற்காக படகிலிருந்த பலர் கடலில் குதித்துள்ளனர். யுவதி காப்பாற்றப்பட்டார். ஆனால், காப்பாற்றப் பாய்ந்தவர்களில் ஒருவரான தைமூர் கடலில் மூழ்கிவிட்டார். மீனவர்கள் அவரைத் தேடியபோது சடலமாகவே மீடகப்பட்டார்.

மரணவிசாரணைகள் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்றன. திடீர் மரணவிசாரணை அதிகாரி பீ.ஏ.ஜலால்டீன் நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார். (ஐ)

# பனைவள ஆராய்ச்சி நிலையத்தை புனரமைக்க விரைவில் நடவடிக்கை

கொழும்புத்துறை,ஜூன்2

கைதடியில் அமைந்துள்ள பனைவள ஆராய்ச்சி நிலையம் புனரமைக்கப்பட உள்ளது.

இதன் ஆரம்ப கட்டட நடவடிக்கையாக அக்கட்டடப் பகுதியில் இருக்கக் கூடிய கண்ணிவெடிகளை அகற்றித் தருமாறு தென்மராட்சி இராணுவப் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் இந்த நிலையம் பலத்த சேதத்திற்கு உள்ளானது. தற்போது கண்டி விதியில் யாழ்.செயலகத்திற்கு அண்மையில் தனியார் வீடொன்றில் பனை அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

# கருவிகள் வந்துசேர்ந்தன; கண்ணி அகற்றும் பணி ஆரம்பம்

தென்மராட்சி,ஜூன்2

கண்ணிவெடி அகற்றும் கருவிகள் கடந்த சனிக்கிழமை வந்துசேர்ந்துள்ளதையடுத்து அமெரிக்காவிலிருந்து வந்த நிபுணர்களால் தென்மராட்சிப் பிரதேசத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த இந்த கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தற்போது சரசாலை, நுணாவில் பிள்ளையார் கோயில் பகுதியில் தமது பணியை மேற கொண்டு வருகின்றனர்.

தினமும் காலை 6.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை கண்ணிவெடிகள் அகற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### நாளை

வைகாசி 20
திங்கட்கிழமை
(03.06.2002)
திதி : அட்டமி
முன்னிரவு 8.32 வரை.
நட்சத்திரம் : சதயம்
முற்பகல் 10.45 வரை.
சுபநேரம் : 11.52 - 1.22
ராகுகாலம்: 7.22 - 8.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இன்றையதினம் நம்பிக்கையில் உள்ளது; நாளை நடப்பது இறைவனடம் உள்ளது.

# கேரதீவு வீதியூடான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

கேரதீவு வீதியூடான பஸ் சேவையை விரைவில் ஆரம்பிக்குமாறு தென்மராட்சி தெற்கு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு மே மாத இடம்பெயர்வுக்குப் பின்பு இடைநிறுத்தப்பட்ட இந்தச் சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் போக்குவரத்துக்கு பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர்.

இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்ற மக்கள், தமது இடங்களுக்குச் சென்று வீடுகளைப் பார்த்து வருவதற்கும் அவற்றை மீளவும் அமைப்பதற்கும் தினமும் அங்கு சென்றுவரவேண்டி உள்ளதால் தமது பயணத்தில் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதன் காரணமாக மீண்டும் தமது பகுதிக்கான 809 ஆம் இலக்க பஸ் சேவையை தச்சந்தோப்புச் சந்தி வரையுமாவது நடத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை -

நாவற்குழி மகா வித்தியாலயம் மீண்டும் உரிய இடத்தில் கடந்த மாதம் தொடக்கம் ஆரம்பமாகிச் செயற்பட்டு வருகிறது. இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களில் அநேகமானோர் ஏனைய இடங்களில் இருந்தே அங்கு செல்லவேண்டியிருப்பதாலும் மேற்படி சேவையானது மிகவும் அவசியமானதாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-10)

சாவகச்சேரி

**அருள்மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம்**

*(சோலை அம்மன்)*

REGD No: HA/JA/5/312

## வைகாசிப் பொங்கல், காவடி விழா

வழமைபோல் வைகாசி 20 ஆம் நாள். 03.06.2002 திங்களன்று நடைபெறும்.

*அனைவரும் வருக! அருள் பெறுக!*

- தேவஸ்தானம்.

(4393)



## பொதுமக்களுக்கு யாழ்.மாநகரசபை விடுக்கும் பணிவான வேண்டுகோள்

யாழ்ப்பாண மாநகரசபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் நியாயமற்ற கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமையினால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. நிர்வாகத்தினால் மாற்று நடவடிக்கை எடுக்கும்வரை பொதுமக்களாகிய நீங்கள் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி, கழிவுப் பொருள்களை வீதிகளில் வீசுவதைத் தவிர்த்து, தங்கள் காணிகளுக்குள் புதைக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

மாநகரசபை அலுவலகம்,
31.05.2002

செ.கந்தையன்
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(C-22362)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஏல விற்பனை

**ஏல விற்பனைத் திகதி: 2002.06.12 காலை 10.30 மணி**

*(அலுவலக நேரத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்)*

| | | |
|---|---|---|
| 01. | கல்குலேற்றர் | - 02 |
| 02. | தமிழ் தட்டச்சு இயந்திரம் | - 03 |
| 03. | வூல்சிலி பம்பி | - 01 |
| 04. | றாக்கை பெரிது | - 01 |
| 05. | ஆங்கிலத் தட்டச்சு இயந்திரம் | - 03 |
| 06. | மின் மோட்டார் | - 01 |
| 07. | அளவு தராசு 200 கி.கி. | - 01 |
| 08. | மர ஸ்கிறின் துணியுடன் | - 01 |
| 09. | சாய்மனை வாங்கு (மரம்) | - 01 |
| 10. | காசுப் பெட்டி | - 01 |
| 11. | பில்ரர் | - 01 |
| 12. | சுவர் மணிக்கூடு | - 01 |
| 13. | பில்ரர் 2 கலன் | - 01 |
| 14. | கழிவகற்றும் வண்டில் | - 01 |
| 15. | சைக்கிள் (றச்) | - 01 |
| 16. | சிறிய றப்பர் சில்லுவண்டில் | - 01 |
| 17. | இரும்புப் பாதுகாப்புப் பெட்டி | - 02 |

சித்திபெற்ற ஏலதாரர் உடன் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதுடன், பொருள்கள் அனைத்தையும் உடன் அப்புறப்படுத்தல் வேண்டும்.

வலிகாமம் மேற்கு
பிரதேச சபை,
சுழிபுரம்.

திரு.வே.மகேந்திரன்
உபதலைவர்.

(C/22358)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்கழகத்தினால் 24.05.2002 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் இலக்கங்கள்:

முதலாம் பரிசு இலக்கம் - 5812
இரண்டாம் பரிசு இலக்கம் - 2706
மூன்றாம் பரிசு இலக்கம் - 4061

**ஆறுதல் பரிசுபெறும் இலக்கங்கள்:-**

0710, 5961, 0644, 4601, 1304,
4788, 7408, 4885, 2380, 7405

**பரிசுப் பொருள்களை புவியியற்கழகத்தினரிடம் பெற்றுக்கொள்ளவும்.**

*பரிசில்களுக்காக நிதியுதவிகளை வழங்கியவர்கள்:*

1. நியூ விதுசன் நகை மாடம், கஸ்தூரியார் வீதி.
2. பபு கொமினிக்கேஷன், வளாக வீதி.
3. றெனி மூக்குக் கண்ணாடி அகம், ஆஸ்பத்திரி வீதி.
4. ராசி சில்க்ஸ், நவீன சந்தை உட்புறம்.
5. சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
6. வீனோ நகைப் பூங்கா, கஸ்தூரியார் வீதி.
7. ராஜா கிறீம் ஹவுஸ், கஸ்தூரியார் வீதி.
8. சிறிராஜன் பான்ஸி பலஸ், நவீன சந்தை உட்புறம்.
9. வாணி ரெக்ஸ்ரைல்ஸ்
10. முத்துக்குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்
11. S.V.முருகேசு அன் சன்ஸ்
12. E.S.பேரம்பலம் அன் சன்ஸ்
13. எரிக்கனேஷ் மூக்குக் கண்ணாடியகம்
14. சோபனா நகை மாடம், கஸ்தூரியார் வீதி.

புவியியற்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(4396)


## ஆங்கில கற்கை சுற்றுவட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்.ஆங்கில கற்கை சுற்றுவட்டம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் வி.சிவராஜசிங்கம் 'ஆங்கில இலக்கியத்தில் சிலேடையும், முரண்தகையும் (SATIRE AND IRONY IN ENGLISH LITERATURE) என்ற பொருளிலும் -

கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற வி.பிரகாஷ் 'கனேடிய வாழ்வியல் பாங்கு' (CANADIAN LIFE STYLE) என்ற பொருளிலும் கருத்துரை வழங்குவர். (எ)

## நுணாவில் மத்தி ஆலயத்தில் கூட்டம்

தென்மராட்சி,ஜூன்2

நுணாவில் மத்தி கந்தசுவாமி (வைரவர்) ஆலயத்தில் மீண்டும் பூஜைகள் ஆரம்பிப்பது தொடர்பான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அடியார்களைக் கலந்துகொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா இ.சோமாஸ்கந்தசர்மா அறிவித்துள்ளார். (க-117)

## பாடசாலை கட்டட திறப்பு விழா

காரைநகர்,ஜூன்2

காரைநகர், வியாவில் சைவ வித்தியாலயத்தின் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழா எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிறுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் வித்தியாலய அதிபர் அ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

1989இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து மூடப்பட்டிருந்த மேற்படி பாடசாலை கடந்த மூன்று ஆண்டுகளாக மீண்டும் இயங்கி வருகிறது. (எ-73)

## தொகை மதிப்பீடு தொடர்பான கூட்டம்

வலிகாமம் தெற்கு,ஜூன்2

பாடசாலை தொகை மதிப்பீடு சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை பின்வரும் இடங்களில் நடைபெறும்.

உடுவில் கோட்டம் - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி (காலை 9 மணி - 12 மணி)

தெல்லிப்பழை கோட்டம் - மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் (பி.ப. 2 மணி - 5மணி)

சங்கானை கோட்டம் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி (பி.ப.2 மணி - 5 மணி)

சண்டிலிப்பாய் கோட்டம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி (காலை 9 மணி - 12 மணி)

இவ்வறிவுறுத்தல் கூட்டத்திற்கு பாடசாலை அதிபர்களும், மேற்படி விடயம் தொடர்பான ஆசிரியர்களும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-152)

## மாலைநேர வகுப்புகள்

வலிகாமம் தெற்கு,ஜூன்2

சண்டிலிப்பாய் திருச்சபையின் நற்செய்திப் பணிக்களமாகிய தோபபு கிராமத்தில் இலவச மாலைநேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. தரம் மூன்று தொடக்கம் தரம் ஒன்பது வரையான வகுப்புகளில் பயிலும் மாணவ - மாணவிகளுக்கான இவ்வகுப்புகளை அருட்திரு.டி.எஸ்.மதியாபரணம் நடத்தி வருகிறார். (ம-152)

## அராலி ஆலய அன்னதான மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்2

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

அன்றையதினம் நண்பகல் 12 மணிக்கு அடியார்களுக்கு அம்மண்டபத்தில் வைத்து அன்னதானம் வழங்கப்படும்.

திறப்பு விழாவை முன்னிட்டு இடம்பெறும் விசேட பூசைகள், ஆராதனைகளை அடுத்து இரவு 8.30 மணிக்கு அம்பாள் வீதியுலா இடம்பெறும். இரவு நிகழ்ச்சிகளாக சமய சொற்பொழிவுகளும், சமய சம்பந்தமான இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (க-15)


## கண்ணீர் அஞ்சலி

இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு.ப.கணேசலிங்கம் அவர்களின்
அன்புத் தந்தையார்

**சோமசுந்தரம் பரராஜசிங்கம்**

அவர்களின் மறைவால் துயருறும் அவருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதி வருடம்,
இந்து மெய்யியல் மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(4399)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### *DIPLOMA COURSE IN PHYSICAL EDUCATION*

Applications are invited from qualified persons who wish to register for the above course in the University of Jaffna.

**Requirements:**

1. *Should be in the age group 18 - 28 years.*
2. *Should have a minimum of three passes in the G.C.E. (A/L).*
3. *Eligibility to apply for University admission in Sri Lanka and the selection will be made by a written examination and practical assessment conducted by the University. These examinations will be held at University of Jaffna, Thirunelvely only.*
4. *Should pass the oral examination:*
   Note: *Preference will be given to those candidates who have participated in sports and athletics and won places at District and National Level.*
5. *The University Senate may relax the age requirement in the case of the candidates who are already in the sports profession in Government and non-Government Sectors.*

*Course Fee:* Rs. 6,000/= per year
*Duration:* Two Years (Internal - Full Time)

Application forms and handouts could be obtained from the Assistant Registrar/Exams & Admissions Branch, University of Jaffna on a payment of Rs.50/=. Duly filled application forms should be submitted to the "Assistant Registrar/Exams & Admissions Branch, University of Jaffna" on or before 1st of July 2002.

**Registrar.**

(C/22364)



இளமை மற்றும் அழகின்
## ரகசியம்




நினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

# பயோட்டின் - H 250

உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...

மேலும்
1. தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக்கூடிய முடி
2. சரும நோய், தோல் சுருங்கி வயதான தோற்றம், காய்ந்த சருமம்
3. சீரற்ற மெல்லிய உடையக்கூடிய நகம், போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம்பெற

BIOTIN - H உதவுவதாக விஞ்ஞானரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.

**விற்பனை முகவர்கள் தேவை!**

இலங்கையில் ஆங்கில மருந்து வகைகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருவதில் முன்னணியில் திகழும் ஆர்கெம் நிறுவனத்தார் தமது **BIOTIN- H** உட்பட ஏனைய மருந்து வகைகளை விநியோகிப்பதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**ARKEM PHARMACEUTICALS**
12 1/1, Prince of Wales Avenue, Colombo-14, Sri Lanka.
Tel : 075-344436, 075-377746
Tel/Fax : 0094-1-470290, Mobile : 077-805738
E-mail : arkem@sltnet.lk

# இந்த மண்ணிலா? இப்படியும் நடக்குமா?

## பெண்ணைப் பெற்றவர்களை எச்சரிக்கும் ஒரு சம்பவம்!

**ஷர்மிளா**

அந்தத் திருமணமும் வெகு சிறப்பாகத்தான் நடந்தது. லண்டன் மாப்பிள்ளை விடாப்பிடியாக ஒற்றைக் காலில் நின்று செய்ய விரும்பிய திருமணம். பெண்ணை கண்கலங்காது காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் பெரியவர்கள் பேசி முடித்த திருமணம். கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த மாப்பிள்ளை வீட்டார் கற்பிட்டியைச் சோந்த பெண் வீட்டாருக்கு ஏற்கனவே தெரிந்தவர்கள்தான். மாப்பிள்ளையின் தந்தையும் பெண்ணின் தந்தையும் ஒரே இடத்தில் பணி. கொஞ்சம் தூரத்துச் சொந்தமும்கூட.

லண்டன் போய் பல வருடங்களுக்குப் பின்னர் சொந்த ஊர் திரும்பியிருந்த மாப்பிள்ளையை பற்றி பெண்வீட்டாருக்கு ஏகப்பட்ட பெருமிதம்.

மூன்று பெண் சகோதரங்களையும் வெளிநாட்டுக்கு எடுத்துப்போட்டார். பொறுப்பான பிள்ளை என பெண வீட்டார் புகழ்ந்துதள்ளினர்.

திருமணம் முடிந்தது. மாப்பிள்ளையின் குணம் பிடித்துவிட்டதால் வயது வித்தியாசம் அதிகமிருந்ததை எவரும் பெரிதாக்கவில்லை.

ஆனால், திருமணம் முடிந்த ஓரிரு தினங்களில் லண்டன் மாப்பிள்ளையின் சுயரூபம் பேரிடியாக பெண்ணின தலையில் இறங்கியது.

கணவன் என்ற உரிமையுடன் பெணணிடம் கடந்த கால வாழ்க்கை பற்றி விசாரணையை தொடங்கினார் புதுமாப்பிள்ளை. அதில் எந்த தவறும் காணமுடியவில்லை.

இறுதியில் ஏதோ எழுதப்பட்டிருந்த தாள்களை நீட்டி அதை வாசிக்காது கையெழுத்து வைக்கும்படி மனைவியை அதட்டினார். மனைவி மறுத்தாள. கத்தியை காட்டி மிரட்டியதாகவும் கூறப்படுகிறது. எனினும் அது தோல்வியிலேயே முடிந்தது. கடைசி ஆயுதத்தைக் கையில் எடுத்தார் லண்டன் மாப்பிள்ளை. பெண்ணின் நடத்தையில் [illegible]கப்படுவதாக கதை அளந்தார். இந்தக் க[illegible]னைவியைத்தாண்டி வீட்டாருககு [illegible]த் தொடங்கின.

பெண் வீட்டார் முதல்தடவையாக மாப்பிள்ளை மீது சந்தேகம் கொண்டனர். விசாரிக்கத் தொடங்கினார்கள். இதற்கிடையில் லண்டன் சென்று மனைவியை அங்கு அழைப்பதறகு ஒழுங்குகள் செய்வதாக கூறி விட்டு விமானம் ஏறிவிட்டார் மாப்பிள்ளை.

"திருமலையில் பெண் பார்த்தேன. அந்தப்பெண் நடத்தை சரியில்லாததால் அவளைக் கட்டவில்லை" என்று மாப்பிள்ளை முன்னர் கூறியிருந்தது நினைவுக்கு வர அந்த விடயத்தை தோண்டித் துருவினர் பெண்வீட்டார். விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் லண்டன் மாப்பிள்ளையின் உணமைச சொரூபத்தை வெளிச்சம் போடடுக்காட்டின.

2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத தில் இலங்கை வந்திருந்த அந்த நபர் ஏழாலைப்பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை தனது சிறிய தாயார் மூலம் மணம்பேசி திருமலைக்கு அழைத்து திருமணமும் செய்து கொண்டிருந்தார். திருமணம் முடிந்ததும் அங்கேயும் வெற்றுக் கடதாசியில் கையெழுத்து வாங்கும் நடவடிக்கை நடந்துள்ளது. வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான பணிகளுக்காகவே அந்தக் கையெழுத்துக்கள் என்று காரணம் வேறு கூறினாராம் அவர். அதன் பின்னர் அந்தப் பெண்ணின் தங்கையை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி கொழும்பு கூட்டிச்சென்று அங்கு வைத்து தனது ஆசைக்கு இணங்குமாறு மிரட்டியுமுள்ளார் லண்டன் மாப்பிள்ளை. அக்கா கணவனின் அகோரமுகம் தெரிந்தது அந்த அப்பாவிப் பெண்ணுக்கு. கண்ணீருடன் ஊர்திரும்பிய அந்தப் பெண், வீட்டாரிடம் நடந்ததைக் கூறினார். அப்போதுதான் திருமணப் பேச்சுகள் நடந்தபோது திருமலையில் தங்கியிருந்த வீட்டில் மற்றொரு பெண்ணுக்கும் 'மைனர்' மாப்பிள்ளை வலை விரித்த கதை தெரியவந்தது.

'பெண்ணின் வாழ்க்கை இப்படியாகிவிட்டதே?' என்ற கவலையில் அந்தப் பெண்ணின் தந்தையும் காலமானார். அதனால் மாப்பிள்ளையின் திருகுதாளம் அப்படியே முட[illegible] போனது. இவற்றை அறிந்ததா[illegible] பட்ட அதிர்ச்சி குறையும் முன்னரே, மாப்பிள்ளைக்கு லண்டனிலும் ஒரு திருமணம் நடந்து, மனைவி, குழந்தை இருப்பது தெரியவர இதயம் வெடிக்காத குறையாக உறைந்துபோனது கற்பிட்டிக் குடும்பம். இந்த நிலையில் தான் லண்டனில் இருந்து சமீபத்தில் ஊர்திரும்பினார் மாப்பிள்ளை. கற்பிட்டியில் மனைவி வீட்டுக்கும் சென்றார். அறிந்ததைச் சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தத்தளித்தது அக்குடும்பம். ஆனாலும் நடப்பது நடக்கட்டும் என்று மனதை தேற்றிக்கொண்டனர் அவர்கள். மாப்பிள்ளை மனம் திருந்த வைக்கும்படி இறைவனை வேண்டுவதைத் தவிர வேறு வழி அவர்களுக்கு இருக்கவில்லை.

ஆனால் மாப்பிள்ளையோ மனம் வருந்தவுமில்லை; திருந்தவுமில்லை. கோண்டாவிலில் உள்ள உறவினர் வீடுகளுக்கு மனைவியை அழைத்துச் செல்வதை நாசூக்காக தவிர்த்து வந்தார். திருமணமான ஒருசில நாள்களிலேயே பதிவுத் திருமண சான்றிதழின் மூலப்பிரதி உட்பட திருமணம் நடந்ததற்கான சான்றுகளை கைப்பற்றி அழிப்பதற்காக பெண்ணை அன்பாயும், அச்சுறுத்தலாயும் பணிய வைக்க கணவன் மேற்கொண்ட முயற்சிகளுடன் தற்போதைய அவரது நடவடிக்கைகளை முடிச்சுப்போட்டுப்



பார்த்தது அக்குடும்பம். அப்போது தான் அந்தச் செய்தி காற்றுவாக்கில் வந்து கற்பிட்டியில் பரவியது. இம்முறை லண்டன் மாப்பிள்ளையுடன் வந்துள்ள அவரைப் பெற்ற மகராசி ஆசை மகனுக்கு கோண்டாவிலில் மணம் முடிக்க பெண்தேடும் செய்தியே அது. கொதித்துப் போனார்கள் கற்பிட்டிக் குடும்பத்தினர்.

இனியும் பொறுமைக்குப் பெருமை இல்லை என பொங்கிய அக்குடும்பம், முறையிடவேண்டியவர்களுக்கு முறையிட்டுள்ளது.

லண்டன் மாப்பிள்ளையின் லீலைகளில் தெரியவந்தது இது. தெரியாதது எவ்வளவோ. எப்படியிருப்பினும், இனியும் ஒரு பெண் இத்தகைய 'மைனர்'களால் ஏமாந்துவிடக்கூடாது. இது பாதிக்கப்பட்டவர்களின் ஒரே எண்ணம். ☆

# கடமை வேளை கிராம அலுவலர்கள் தாக்கப்படுவது குறித்து ஆட்சேபம்

## சங்கம் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

நீதிமன்றின் அழைப்பாணையை விநியோகிப்பதிலும் பிடிவிறாந்துக்குரியவரை நீதிமன்றின் முன்பாக நிறுத்துவதிலும் பல சிரமங்களையும் அச்சுறுத்தல்களையும் கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்குகின்றனர்.

யாழ்மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தினால் யாழ்.அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சட்ட ஒழுங்கு விடயங்களைக் கிராம மட்டத்தில் நிறைவேற்றும் கிராம உத்தியோகத்தர்கள் இவ் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்பொழுது தாக்கப்படும் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டில் இடம்பெற்ற இரண்டு விடயங்களைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் பிரச்சினைக்குரிய திருமண விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி உதவி அரசாங்க அதிபரின் பணிப்புக்கமையச் செயற்பட்ட கிராம உத்தியோகத்தர் கடுமையாகத் தாக்கப் பட்டுள்ளார். இதனால் உதவி அரசாங்க அதிபர் பணிமனை செயற்பட முடியாதவாறு மூடப்பட்டது. இது விடயம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் அவர்களால் பாதுகாப்பு வழங்கப்படவுமில்லை நடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் பொலீஸ் அழைப்பாணையை விநியோகிக்கச் சென்ற துர்க்காபுரம் கிராம உத்தியோகத்தரை அழைப்பாணைக்கு உரியவர் தாக்கியதுடன் மோட்டார் சைக்கிளையும் சேதமாக்கி உள்ளார்.

குறிப்பாக சட்டவிரோத சம்பவங்களில் ஈடுபடுபவர் விடயங்களில் உயிராபத்தையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவ்விடயங்கள் தொடர்பாக எமது அதிருப்தியைத் தெரிவிப்பதுடன் எமக்குரிய பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். தற்பொழுது ஏற்பட்டுள்ள மாற்றத்தின் பின்பு இவ்விடயங்களை முன்னைய காலம் போன்று சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கூடாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுத்து உதவும்படி தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். - என்று குறிப்பிட்டுள்ளது.

(க-10)

# சனத் குணதிலக்கவிடம் சி.ஐ.டி. பல மணிநேரம் விசாரணை

சினிமா நடிகரும், ஜனாதிபதியின் முன்னாள் ஊடக ஆலோசகருமான சனத் குணதிலக்க இரகசியப் பொலீஸாரினால் விசாரிக்கப்பட்டார்.

சினிமா நடிகை அனோஜா வீரசிங்கவின் மொனறாகலை வீட்டுக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கடந்த புதன் காலை சி.ஐ.டி. தலைமை அலுவலகத்துக்கு வருமாறு அவர் கோரப்பட்டிருந்தார். ஆனால் குறிப்பிட்ட நேரத்துக்கு அவர் வரவில்லை. இதனால் அவரைத் தேடி இரண்டு விசேட பொலீஸ் குழுக்கள் அனுப்பப்பட்டன. எவ்வாறாயினும் அன்று பிற்பகல் அவர் சி.ஐ.டி. தலைமையகத்தில் ஆஜரானார். அவரிடம் விசாரணை நடைபெற்றது.

இதற்கிடையே, இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருக்கும் மூன்று சந்தேகநபர்கள் கொழும்பு மேலதிக நீதிவானால் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ஐ)

# எம்மை ஏன் படையினர் படம் எடுக்கவேண்டும்?

## மட்டு.மாங்கேணிப் பகுதி மக்கள் கேள்வி

மட்டக்களப்பு,ஜூன்2

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாங்கேணிப் பிரதேசத்தில் வசித்துவரும் பொதுமக்களைப் படையினர் புகைப்படம் எடுத்துவருவதால் அவர்கள் கலக்கமடைந்துள்ளனர். சமாதானச் சூழ்நிலையில் ஏன் படம் எடுக்கவேண்டும் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மாங்கேணிப் பிரதேசத்தில் நீண்டகாலமாக இருந்து வந்த படையினரின் கெடுபிடிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப் பட்ட பின்பும் தொடர்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் தமது அரசியல் பணிகளை முன்னெடுத்துவரும் விடுதலைப் புலிகள் வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு, கண்ணன் கிராமம் ஆகிய பகுதிகளுக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காகச் செல்லும்போது அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் படையினர் புலிகள் சென்றுவரும் வீடுகளையும் படம் எடுத்துவருகிறார்களாம்.

இதேவேளை -

காயாங்கேணியில் உள்ள படையினர் அப்பகுதியில் உள்ள உடைந்த வீடுகளின் கற்கள் மற்றும் கூரை ஓடுகளைப் பயன்படுத்தித் தமது முகாம்களைப் பலப்படுத்திவருவதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-10)

# விண்ணகத்தில் உன்னதமான வாழ்வுபெற நல்வழிகள் காட்டிநிற்கும் நற்கருணைத் திருவிழா

**மோ.தார்சீசியஸ்**

இன்று கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தத்தின் பெருவிழாவை நாம் கொண்டாடுகிறோம். இதனை நாம் நற்கருணைத் திருவிழாவென்று அழைக்கின்றோம். கிறிஸ்து தமது உடலையும் இரத்தத்தையும் நமக்கு அன்ன பானமாக அளித்த தியாகத்தின் அன்பின் மாண்புமிக்க பெருவிழாவாகும். நற்கருணை அன்பின் அழியாத உறவை வளர்க்கும் விருந்தாகும். எமது ஆன்ம போசனத்தின் மருந்தாகும். நற்கருணை விருந்தானது இறைவனையும் எம்மையும் இணைக்கும் பாலமாகும்.

### ஞாயிறு நற்பிரசாதம்

இறைவனின் அன்பு அளவிடமுடியாதது. அந்த மாபெரும் அன்பைக் கிறிஸ்து நற்கருணைமூலம் வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், அதில் நாம் அனைவரும் உள்ளன்போடு பங்குகொள்ளவேண்டும் என்றும் கற்பித்தார். தமது உண்மையான அன்புறவை எண்பிக்க அவர் விரும்பினார். தம் உயிரையே எமக்காகத் தியாகம் செய்தார். அந்த உயிர்த் தியாகம் செய்வதற்கு ஒருசில மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே, அதாவது பெரிய வியாழக்கிழமையன்று தமது இறுதி இராப்போசனத்தின்போது இதனை ஏற்படுத்தி அதனைத் தமது ஞாபகமாகச் செய்யும்படி உண்ணும்படி கற்பித்தார்.

விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து வாழ்வுதரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகுக்காகவே கொடுக்கிறேன் என்றார் கிறிஸ்து. (யோவான 6:51-52) இயேசு உயிர் வாழ்ந்தபோது நற்கருணையை ஏற்படுத்த முன்னர் தமது அன்புச் சீடர்களுக்கு முன்னுரைத்தார். தாம் செய்ய இருக்கிற



மனுக்குலம் என்றும் வாழ, மானிடம் நித்திய வாழ்வுபெற சத்திய வாக்குரைத்தார். மேலும் இந்த உன்னத விருந்தின் மகிமையை, பெருமையை, அருமையை அவர்கள் நன்கு புரிந்து கொள்ளும்படி அவர் கூறியதாவது:-

எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத் தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர் களோடு இணைந் திருப்பேன். (யோ வான் 6:55-56) விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு இதுவே. இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர். (யோவான் 6:58).

இவ்வரிய பெரிய உரையின் மூலம் நற்கருணையைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். இந்த அவரது திருவிருந்தில் தினமும் தகுந்த முறையில் பங்குகொள்ளும் போது நித்திய வாழ்விற்கு நாம் உரிமையாகின்றோம். விண்ணகத்திலே நமக்கு நிலையான, உறுதியான, உண்மையான, உன்னதமான வாழ்வு உண்டு என்பது நமக்கு உறுதிப்படுத்தப்படுகின்றது. அவரது தூயகத்தில் எமக்கு பங்குண்டு என்பதை எண்பிக்கின்றார்.

இந்த அன்பின் தேவ நற் கருணையிலே, அழியாப் புகழோடு வீற்றிருக்கும், வாழ்ந்திருக்கும் இறைமகன் எமக்கு இலவசமாகக் கொடுத்த மாபெரும் கொடை, மகத்தான விருந்து இதுவாகும். அவர் எம்மை நோக்கி இந்த விருந்திலே தினமும் தகுதியுடன் பங்குகொண்டு ஆன்ம பலத்தைப் பெறும்படி அழைக்கிறார். இந்த அழைப்பை நாம் ஏற்கிறோமா? திருவிருந்தில் தினமும் பங்குகொள்கிறோமா? அவரது அன்பை ஏற்கிறோமா?

தேவ நற்கருணையின் பரிசுத்தத் தன்மையைப் போற்றிப் புகழுவோம்.

*"பரலோக பூலோக மன்னாவே*
*சீவியம் தந்திடும் அப்பமே*
*பாவிகள் நாங்கள் உம்மை*
*வணங்கி ஆராதிக்கிறோம்".* ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய அளவுகளில் தினமும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 40, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (4373)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4262)

தரமான புறொயிலர் கோழிகள் இலவசமாக சுத்தம்செய்து தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: குமரன் பாம், 227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (4314)

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4407)

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்: மாருதிரெக்ஸ், இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4365)

## Matrimorial Notice

A Roman cathalic M.B.B.S. Doctor specialist with wounded leg's wishes to marry a learned lady, age 37. Contact: S.A.Tharmalingam, No.24, Broodie Lane, Kachcheri East, Jaffna. (4375)

## வகுப்புகள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து வகுப்புகள் 03.06.2002 திங்கட்கிழமை ஆரம்பம். தொடர்பு: 5, அம்மன் வீதி (வைரவர் கோயில் முன்பாக), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4405)

## விற்பனைக்கு

கோல்ட் விஷ் மீன்கள், கலிக்கோ மீன்கள், மீன் தொட்டிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. விஜயன், 35/1, இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4404)

குபேட்டா லாண்ட் மாஸ்டர் K550, K700 ஆகியன விற்பனைக்கு உண்டு. 508CC என்ஜின் தனித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (4381)

தட்டச்சு வகுப்பிற்குத் தேவையான தளபாடங்களும், தட்டச்சு இயந்திரங்களும் (தமிழ், ஆங்கிலம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 140, பலாலி வீதி, திருநெல்வேலி (பரமேஸ்வரா சந்தி அருகில்). (4346)

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் 18 பரப்பு பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளும் கொண்ட கல்வீடும் காணியும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: 70 (34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (4389)

சண்டிலிப்பாய், பொன்னாலை வீதியில் 8 பரப்பு, 18 பரப்புக்காணி சம துண்டுகளாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சுதாகரன், 40/3, புகையிரதப்பாதை கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்; மது, டச் வீதி, சண்டிலிப்பாய். (4265)

சொனி (sony) T.V. 14", J.V.C. - JP -12A ஜப்பான் (Japan) புதிய டெக்கும், பனசொனிக் (Panasonic) NV - SD 220 ஜப்பான் (Japan) டெக்கும், 30 திரைப்படப் பிரதிகளும் (ஒன்று 125/-) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.யோகராஜா, 'செங்கமலம்', அச்சுவேலி (வல்லை வீதி- ரைட் ரைட்டிங் வீடு). (4356)

பிறிமா லோமன் புறொயிலர் குஞ்சுகளும் ஒரு கிழமை வளர்ச்சியடைந்த கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகாபதி, மானிப்பாய். (C/22355)

இரு மாதங்கள் நிரம்பிய கறுப்பு நிற பொமனேறியன் இரண்டும், 8 மாதங்கள் நிரம்பிய வெள்ளைநிற பொமனேறியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜே. அல்பிறேட், 25, பாக் றோட், றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். (4409)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் வாகனப் போக்குவரத்து வசதியும், மின்சாரம், தனிக்கிணறு, மலசலகூடம் போன்ற வசதியுமுடைய 1 1/2 பரப்புக்காணி (4 அறைகளும் Hall இற்குரிய அத்திவாரத்துடன்) கல்வியங்காட்டில் விற்பனைக்கு உண்டு. Survey Plan முதலிய விவரங்களுக்கு: க.அம்பிகைபாகர், 38, சிவன கோவில் றோட், திருநெல்வேலி தெற்கு. (4336)

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சண்முகநாதன் ஶ்ரீகாந்த் என்பவருடைய தே.அ.அட்டை (இல.752732892V) மல்லாகம் சந்திக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பரமேஸ்வராச் சந்தி சஞ்சீவ விலாஸில் ஒப்படைத்துதவவும். (4387)

அருட்சோதி உமாசுதன் என்பவரது தே.அ.அ.(இல.811261807V) யாழ் நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 53/10, அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (4408)

## அகவை அறுபதில் சேவை நலன் பாராட்டு



### திரு.கதிர்காமு அருணாசலம்

*(அதிபர்)*

35 வருட ஆசிரிய சேவையில் 1998ஆம் ஆண்டு தொடக்கம் அதிபராக எமது பாடசாலையில் இணைந்து நற்சேவையாற்றி அகவை அறுபதாம் இன்று (02.06.2002) இல் ஓய்வுபெறும் எமது அதிபர், அளவையூர் நாகவரத நாராயணர் திருவருள் கிடைக்கப்பெற்று சகல சௌபாக்கியங்களோடும் சிறப்போடும் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்.**

*யா/அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி.* (4312)

## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

### 12ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

காலம் : இன்று (02.06.2002) ஞாயிறு பிற்பகல் 2.00 மணி
இடம் : கல்வி நிலைய பிரதான மண்டபம்
பிரதம விருந்தினர் : திரு.திருமதி மு.திருநாவுக்கரசு தம்பதியர் (விகடகவி) J.P.U.M. (பதில் நீதிபதி)
சிறப்பு விருந்தினர்கள் : திரு.எஸ்.சோமேஸ்வரபிள்ளை (அதிபர், யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்)
திரு.இ.மா.சிவசுப்பிரமணியம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

மாணவர்களின் சிறப்பான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.
பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(4398) இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

எதிர்வரும் (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு எமது பாடசாலை மண்டபத்தில் 2002ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அத்தருணம் பெற்றோர், பாதுகாவலர் சமுகம் தந்து பாடசாலை முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*யா/வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.* (சி-22368)
செல்வி அ.கனகரத்தினம்
அதிபர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாவதி நவரத்தினம்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி நவரத்தினம் நேற்று (01.06.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் குகபரன் (யாழ். பல்கலைக்கழகம், கலைப்பிரிவு இறுதியாண்டு மாணவன்), குகறூபி (முன்னாள் மாணவி, யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*விதானை வளவு, சித்தன்கேணி.* (4413)
தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## BITSMANS

கல்வி நிறுவனம் - மானிப்பாய்
இறுதிப் பிரிவு
*O/L DAY CLASS*
(எமது வழமையான ஆசிரிய குழு)
ஆரம்பம்: 03.06.2002
திங்.8.00 a.m.
(4380)

## மருந்தகத்தில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை

தொடர்பு:
ஜனனி மருந்தகம்
ஆனைக்கோட்டைச் சந்தி.
(4347)

## திருமண வாழ்த்து

இன்று 02.06.2002ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மங்களகரமான சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் 19ஆம் நாள் பகல் 11.09 முதல் 12.57 வரையுள்ள சிங்க லக்கின சுபவேளையில்,

| | |
|---|---|
| திரு.திருமதி பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் | திரு.திருமதி கணேசதாசன் J.P. றொஜிஸ்ரார் தம்பதிகளின் |
| கனிஷ்டபுத்திரன் திருநிறை செல்வன் | சிரேஷ்டபுதல்வி திருநிறை செல்வி |
| **தனேந்திரன்** (Baby) | **லோகினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் திருவருள் துணையுடன் வெள்ளவத்தை, அலெக்ஸான்றா வீதி, எமிறால்ட் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் வெகுவிமரிசையாக நடைபெறுகின்ற இத்தருணத்தில் இப்புதுமணத் தம்பதிகள் பல்லாண்டுகாலம் பதினாறு செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ எல்லாம்வல்ல மானிநகர் மருதடிவிநாயகன் துணை நிற்பார் என வாழ்த்துபவர்கள்:

**திரு.திருமதி இரா.லோகேந்திரராஜா குடும்பத்தினர்.**
கட்டுடை, மானிப்பாய்.
(4403)

## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாணம்
### மாணவ ஆண் தாதி/பெண் தாதி பயிற்சிக்கு ஆள்களைச் சேர்த்தல்–2002

மேற்படி விடயம் சம்பந்தமாக 'உதயன்' பத்திரிகையில் 2002-03-07ஆம் திகதி என்னால் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் 2002-05-08ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முன்னர் விண்ணப்பித்தவர்களும் இதற்கமைவாக விண்ணப்பங்களை **"செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், நீதிமன்ற வீதி, திருகோணமலை"** என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 2002-06-07ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

விண்ணப்பத்துடன் சுயமுகவரியிட்ட பதிவுத் தபாலுக்குரிய முத்திரையுடன் கூடிய நீண்ட தபால் உறை ஒன்றினையும் அனுப்புதல்வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு தங்கள் பகுதியிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையிலும் எமது பணிமனையிலும் பார்வையிடலாம்.

**வைத்திய கலாநிதி உ.சிவபாதசுந்தரம்,**
*மாகாண பிரதிப் பணிப்பாளர்,*
*சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.*
(C/22363)

## WANTED

A Reputed Company in Colombo Requires a young energetic person to work as a Sales / Marketing representative to market their products in Jaffna. Experience in sales and marketing of consumer products, preferred.

***Age between 20 and 35 years.***

*Apply immediately,*
**Box No. 1529,**
**C/O - UTHAYAN, JAFFNA.**
(C/22345)

## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி கற்க அனுமதி பெற்றுத் தரப்படும்.

| ஊடகம் | காலம் | செலவு/வருடத்துக்கு |
|---|---|---|
| ஆங்கிலம் | 6 வருடம் | 4 லட்சம் |
| ரஷ்யமொழி | 7 வருடம் | 2 லட்சம் |

உடன் தொடர்பு கொள்ளவும்.

காலை: Dr.க.சிவனடியான், *மூத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை.*
மாலை: யாழ் வீதி, மானிப்பாய்.
(4348)

## கண்ணீர் அஞ்சலி

எமது துறையின் 4ஆம் வருட மாணவி
**செல்வி கா.நந்தகோபி** அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி காசிலிங்கம் திலகவதி

அவர்கள் சென்ற 24.05.2002இல் சிவபதமடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினரிற்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.**
(4406)

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலையில் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்*
திரு.ப.இராஜேஸ்வரன் அவர்களின் தந்தையார்

### அமரர் சோமசுந்தரம் பரராஜசிங்கம்

அவர்கள் சிவபதமடைந்தமைக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.**
(4378)

## கண்ணீர் அஞ்சலி

இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், எமது மன்றத்துக்கு உறுதுணையாக இருப்பவர்களில் ஒருவருமாகிய **திரு.ப.கணேசலிங்கம்** அவர்களின் அன்புத் தந்தையார்

### சோமசுந்த்ரம் பரராஜசிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்து மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.**
(4400)



நேற்றைய: நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்த அமைச்சர் ரவி சமர வீரவையும், சேவையில் பயன்பெற வந்த [illegible] பதிவுகளை மேற்கொள்வதையும், சேவையில் பயன் பெறுவதற்காக கூடி நிற்கும் மக்களையும், [illegible]க வழங்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்த சக்கர நாற்காலிகளையும் காணலாம். (படங்கள்:-அற்புதன்)

## மந்துவிலில் மக்கள் மீளக்குடியமர்வு

தென்மராட்சி,ஜூன்2

மந்துவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நிலைகொண்டிருந்த படையினர் அப்பகுதியிலிருந்து வாபஸ் பெற்றதையடுத்து இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளில் மீளக்குடியமர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் கூரைகள் இன்றிக் காணப்படுவதால் மக்கள் தற்காலிகக் கொட்டில்களை அமைத்துக் குடியமர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## வயோதிபர்களை தாக்கிய ஆசிரியர்

தென்மராட்சி,ஜூன்2

காணி ஊடாக நடந்து சென்ற வயோதிபத் தம்பதியினரை காணிக்குள் நின்ற இளம் ஆசிரியர் மரச் சலாகையினால் அடித்துக் காயப்படுத்திய சம்பவம் புலோலி மேற்கு கூவில என்னும் இடத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த முருகன் சிவகுரு (வயது 76), அவரது மனைவியான சிவகுரு கனகம்மா (வயது 71) ஆகியோர் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-117)

# சமூக நலன்புரி அமைச்சின் நடமாடும் சேவை யாழ்நகரில்

## நேற்று மத்திய கல்லூரியில் ஆரம்பம்; இன்றும் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்2

சமூக நலன்புரி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதான நடமாடும் சேவை நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

வலது குறைந்தவர்கள், முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டு பல சேவைகளைப் பெற்றனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் சமூக நலன்புரி அமைச்சர் ரவி சமரவீர இந்த நிகழ்வை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் வவுனியா நகர பௌத்த பிடாதிபதி, நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

சமூக நலன்புரி அமைச்சர் ரவி சமரவீர, இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் அமைச்சுச் செயலாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

நலிவுற்றோருக்கு மூக்குக் கண்ணாடிகள், முச்சக்கர வண்டிகள், காது கேட்கும் இயந்திரங்கள், தையல் மெஷின்கள், முதியோர் அடையாள அட்டைகள் என்பன வழங்கப்பட்டன.

நேற்றைய நிகழ்வில் 40 முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மூவாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. காது கேட்காதவர்கள் 10பேருக்கு தலா 10ஆயிரம் ரூபா பெறுமதியான காது கேட்கும் மெஷின்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் 60 தையல் மெஷின்கள், வெள்ளைப்பிரம்புகள், சக்கர நாற்காலிகள் என்பனவும் வழங்கப்பட்டன.

சுயதொழில் புரிபவர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கடன்வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இந்த நடமாடும் சேவை இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.(ம-4-ரி)

## தபால் ஊழியர் சீருடைகள் ஒரு தொகுதி வந்தது

நீண்டகால இடைவெளிக்குப் பின் யாழ்.தபால் திணைக்கள ஊழியர்களுக்கான சீடையின் ஒரு தொகுதி கிடைக்கப் பெற்றுள்ளது.

தபால் விநியோகிப்பவர்களுக்கான சீருடையே தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் ஏனையவர்களுக்கான சீருடைகள் வெகுவிரைவில் கிடைக்கும் எனவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னைய காலங்களில் காக்கி நிறத்திலான சீருடையே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அது மாற்றப்பட்டு நீல நிறத்திலான உடையே வந்துள்ளது.

இச் சீருடைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி வருகை தரும் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மக்கார் யாழ்.தபால் திணைக்கள ஊழியர்களுக்கு வைபவரீதியாக கையளிப்பார். (ம-ரி)

## மக்கள் கோரிக்கை

சரித்திர பிரசித்தி வாய்ந்த நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயத்தில் பூசைகள் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நாகர் கோயில் வாழ் மக்கள் இந்து கலாசார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-13-ரி)

# சிங்கள நாடக உலகின் பிதாமகர் சரச்சந்திரா

**சிங்கள நாடக உலகின் பிதாமகர் என்று வர்ணிக்கப்படும் பேராசிரியர் சரத் சந்திராவின் 'மனமே' என்ற நாடகத்தை திருமறைக் கலாமன்றம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றவுள்ளது. அதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

புகழ்பூத்த கல்விமானும் சிங்கள நாடகக் கலா மேதையுமான அமரர் பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திரா கீழைத்தேச பண்பாட்டுக் கருவூலங்களுக்குள்ளும் சடங்குகளுக்குள்ளும் ஆழ்ந்த தேடலை மேற்கொண்டு, தென



சரச்சந்திரா

கிழக்காசிய நாடக வேர்களைக் கண்டு பிடித்து பிரமிக்கத்தக்க அரங்கொன்றைத் தோற்றுவித்தவர். இலக்கியவாதி மனிதநேயத்தையும் நீதியையும் விசுவாசித்த ஒரு பண்பாளன். கலை சிருஷ்டிப்புகளில் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்திக் கொண்டு இறுதி வரைக்கும் கலை இலக்கியப் பணி புரிந்தவர்.

சிறுவயதில் இருந்தே கலை, இலக்கியம், நாட்டார் கலைகள், சடங்குகள், ஐதீகங்கள் போன்றவற்றில் நாட்டங்கொண்டிருந்த இவர், உயர்கல்வி வரை கல்வியுடன் கலையையும் நேசித்து வந்தார். விஞ்ஞானத்திலும் ஆங்கிலத்திலும் உயர்கல்வி கற்றதுடன், சமஸ்கிருதம், பாளி போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந்திருந்தார். தனது முதுமாணித் தேர்வை லண்டனில் முடித்ததுடன் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக - பௌத்த தத்துவஞானத்தில் கலாநிதியாக - கல்வியில் உயர்ந்து விளங்கிய இவர், பிரித்தானியா, மாலைதீவு போன்ற நாடுகளின் இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றினார். இவரது ஆய்வு நூலான 'Sri Lanka folk Drama' என்ற ஆய்வு நூல் இன்றும் பெரிதும் பேசப்படும் ஒன்றாகவுள்ளது. இவரது கலை இலக்கிய சேவைக்கென இலங்கை அரசு இவரது மறைவின் பின் தபால் தலை வெளியிட்டு கௌரவித்திருந்தது.

பேராசிரியர் சரச்சந்திரா பெரிதும் பேசப்பட்டது நாடகத் துறையினூடாகவே. சிறுவயதில் இருந்தே நாடகத்தின் பால் நாட்டம் கொண்டிருந்த இவா யோண்டி சில்வா, சாள்ஸ் டயஸ போன்றோரின் நாடகங்களை அடிக்கடி பார்த்திருந்தார். தனது இருபது வயதிலேயே ரவீந்திரநாத் தாகூரின் 'ஷபா மெக்ஷான் நாடகத்தைப் பார்த்து ஊக்கமடைந்ததுடன் இந்தியாவுக்குச் சென்று அவரது 'சாந்தி நிகேதனத தில்' இசைப் பயிற்சியும் பெற்றார். பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த போது E.F.C லூடோவிக் 'றங்கசபா' என்ற நாடக குழுவினூடாக நாடகங்களை மேடையேற்ற அவருக்கு உறுதுணையாக இருந்து ஆங்கில மொழிநாடகங்களை சிங்களத்தில் மொழிபெயர்க்க உதவினார். இந்நாடகங்களில் 'Gogol's marriege' நாடகத்தைத் தழுவி மேடையேற்றிய 'கப்புவா கபோதி' நாடகம் பெரும் வரவேற்பைப்பெற்றது.

ஐரோப்பிய இயற்பண்பு அரங்கை- மரபை - அடியொற்றிய நாடகங்களை அதிகம் மேடையேற்றினாலும் பாரம்பரிய மூலகங்களுக்குள்ளான அரங்கொன்றை உருவாக்கவேண்டுமென்ற பேரவா இவரிடம் உள்ளுறைந்திருந்தது.

[illegible] இவருக்குக் கிடைத்த புலமைப்பரிசில் பயணத்திற்கூடாக இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா, யப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று அந்த நாடுகளின் தேசிய அரங்க வடிவங்களைக் கண்ணுற்றார். 'சிங்கள தேசிய நாடக வடிவம்' ஒன்றை உருவாக்க வேண்டும் என்னும் பேரவா இவற்றுக் கூடாக இவரின் மனதில் வேரூன்றியது. குறிப்பாக ஜப்பானிய 'நோ', 'கபுக்கி' நாடகங்கள் இவரில் அதிக தாக்கத்தைச் செலுத்தின.

இந்த தாக்கங்களின் விளைவாக அவர் உருவாக்கிய நாடகமே 'மனமே' ஆகும். சிங்கள பாரம்பரிய அரங்குகளாகிய 'கோலம்', 'சொக்கரி', 'நாடகம்' போன்றவற்றையும் தமிழ் 'தென்மோடி', 'வடமோடி', 'தெருக்கூத்து' வடிவங்களையும் உள்வாங்கி 'நோ' நாடக வடிவத்தன்மையை மனதிற்கொண்டு உருவாக்கிய நாடகமாக 'மனமே' இருந்தது.

இது சிங்கள மக்களை குதூகலத்திலாழ்த்தியதுடன் இதுவே சிங்கள தேசிய நாடக வடிவம் என்று அவர்கள் பெருமைப்படுமளவுக்கு ஜனரஞ்சகம் மிக்கதாகியது. இது முதலில் மேடையேற்றப்பட்டபோது, விமர்சகரான றெஜி சிறீவர்த்தன கூறிய பின்வரும் கூற்று இந்நாடகத்தின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்தியம்புகின்றது. "....1956ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி இலங்கையின் நாடக வரலாற்றில் மறக்க முடியாத தினமாகும். புதியதொரு நாடக சகாப்தத்தினைக் கண்டு களிக்கும் பாக்கியத்தினை அன்று பெற்றோம். சிங்கள நாடக அரங்கு இறுதியில் தனக்குரிய நாடக வடிவத்தைப் பெற்றுக்கொண்டதாக உணர்ந்தோம்".

இவ்வாறான முக்கியத்துவத்தைப் பெற்ற 'மனமே' நாடகத்தைத் தொடர்ந்து 'கதாவலு', 'ஹஸ்த்தி',

**ராஜ்குமார்**

'காந்தமந்திரே', 'வெஸ்லவெஷம்' போன்ற பல நாடகங்களை மேடையேற்றினார். ஆனால் மனமே நாடகத்திற்கு பின் அவரது 'சிங்கபாகு' நாடகம் அதிக வரவேற்பைப் பெற்றது. இவ்வாறு தனது வாழ்வின் இறுதி வரை, சிங்கள அரங்கோடு தொழிற்பட்ட பேராசிரியர், அரங்கிற்கு ஆற்றிய பணிகள் அநேகம். அவர் தொடங்கி வைத்த அரங்கப் பாரம்பரியம் சிங்கள அரங்கை மிகவேகமாக வளர்த்துச் சென்றது. அவரது ஆய்வுகளும் ஆக்கங்களும் அவற்றுக்கு மேலும் வலுச்சேர்த்தன.

சிங்கள அரங்கின் பிதாமகராகத் தொழிற்பட்ட பேராசிரியர், தமிழ் அரங்குடனும் தொடர்பு கொண்டிருந்தவர். தமிழ் மொழி, கலை வடிவங்களையும் ஆதரித்தவர். சிங்கள வரலாற்று ஆய்வுகள் தமிழ் பாரம்பரியத்தையே நிராகரித்து நிற்க, இவரது ஆய்வுகள் நேர்மையான ஆய்வுகளாக இருந்தன. தமிழ் அரங்கின் தொன்மை, தமிழ் மொழியின் தொன்மை, சிங்கள அரங்கிற்கு தமிழ் அரங்கு எவ்வாறு மூலமாக இருந்தது, தமிழ் மொழி சிங்கள மொழிக்காற்றிய பங்களிப்புகள் என பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். இவை இன்றும் சிறந்த ஆய்வுகளாக உள்ளன.

அது மட்டுமன்றி தனது புத்தாக்க நாடகப் பணியில் தமிழ் அரங்கில் இருந்து தான் பெற்றவற்றை வெளிப்படையாகவே கட்டுரைகளில் வெளிப்படுத்தினார். அதுமட்டுமன்றி பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ் கூத்து மரபை புத்தாக்கம் செய்வதற்குத் தூண்டுகோளாகவும் இருந்தவர் இவரே.

1960 தொடக்கம் 1990 வரை தமிழ் அரங்கியல் வளர்ச்சியில் மறைமுகச் சக்தியாக பேராசிரியர் சரச்சந்திரா இருந்தார் என கலாநிதி மௌனகுரு குறிப்பிடுகின்றார்.

அதுமட்டுமன்றி பல தமிழ் நாடகக் கர்த்தாக்களுடன் பேராசிரியர் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். பேரா.வித்தியானந்தன், பேரா.சிவத்தம்பி, பேரா.மௌனகுரு, தாசீசியஸ், பேரா.நீ.மரியசேவியர் அடிகள் போன்றோருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். 1993இல் யுத்தத்திற்கு எதிராக திருமறைக்கலாமன்றம் 'தரிசனம்' என்னும வார்த்தைகளற்ற, 'ஊமநாடகத்தை' தயாரித்தபோது தனது முழு ஒத்துழைப்புகளையும் வழங்கியவர்.

### மனமே நாடகம்

'மனமே கத்தாவ' ஒரு பௌத்த ஜாதகக் கதையாகும். 300 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள 'கோலம்' நாடக மரபில் ஆடப்பட்டு வந்ததொன்று. 'மனமே' எனும் இளவரசன் 'தக்வு சீலத்தில்' குருவிடம் பயிற்சி பெற்ற அவரது மகளையே மணந்துகொண்டு காட்டுவழியாக வந்தபோது வேடர் குழுவினரை எதிர்கொள்ள நேருகின்றது. இவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் வேடர் தலைவருக்கும் மனமேக்கும் இடையே போர் மூழுகின்றது. போரில் இருவரின் வாள்களும் எகிறிவிழ அது இளவரசியின் கால்களின் கீழ் விழுகிறது. இளவரசி வாளை யாரிடம் கொடுப்பாளோ அவரின் வெற்றி நிர்ணயம் பெறுகிறது. ஆச்சரியமாக இளவரசி வேடனிடம் வாளைக் கொடுக்க மனமே கொல்லப்படுகிறான். அவள் வேடனை மணக்க, வேடனும் ஏமாற்றி விட்டுச் சென்றுவிடுகிறான். இருவரையும் இழந்துநிற்கும் பேராசைப் பெண்ணின் அவலம் இக்கதையில் சித்திரிக்கப்படுகிறது. இக்கதையைப்



'மனமே' நாடகத்தில் ஒரு காட்சி

புத்துருவாக்கி பெண்ணிய சிந்தனையின் அடிப்படையில் சரச்சந்திரா மேடையேற்றினார்.

கோலம் கதை சொல்லும் மரபில் இருந்து மாற்றி அதனை நாடகத் தன்மைக்குரியதாக்கினர். இது பார்சிய நாடக மரபுக்கும் ஐரோப்பிய இயற்பண்பு நாடக இயக்கத்திற்கும் மாறுபட்ட ஒன்றாக இந்நாடக மரபு இருந்தது.

தமிழ்க் கூத்துமரபுகள், 'நோ' நாடக அளிக்கைப்பண்புகள், சிங்கள அரங்கின் பூர்வீகத் தன்மை போன்ற பலவற்றையும் இணைத்து ஒயிலாக்கம் செய்து பேராசிரியர் மனமேயை மேடையேற்றினார். எடுத்துரைப்பேன், பாடற்குழு, இசை, பாடல், நடனம், இலக்கியம், அபிநயம, சங்கேதம், சமஸகிருத மற்றும் கீழைததேச நாடகப் பண்புகள் அனைத்தும் பொருத்தமுற இணைந்த வடிவமாக மனமே இருநதது. 1956இல் முதலில் மேடையேற்றப்பட்ட இவ்வடிவம் இன்று வரை சிங்கள மக்கள் மத்தியில் ஜனரஞ்சகம மிக்க வடிவமாக பல்லாயிரக கணக்கான தடவைகள் மேடையேற்றப்பட்டு வருகின்றது. முதல் தடவையாக யாழ்நகரில் அரங்கேறும் இந் நாடக வடிவம் அரங்கியலாளர்களும், கலை ஆர்வலர்களும் கண்டிப்பாகப் பார்த்து ரசிக்க வேண்டியது. ★

# சிறுவர்களின் ஆரோக்கிய வளர்ச்சி யுத்த சூழ்நிலைகளினால் பாதிப்பு

## வவுனியா ஆய்வு தரும் தகவல்கள்

இன்றைய இளைய சமுதாயமே எமது நாளைய தலைமுறை; இந் நாட்டின் எதிர்கால மன்னர்கள். எமது சமூகம் எதிர்காலத்திற்கு விட்டுச் செல்லும் வெறும் எச்சங்களல்ல; விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள்.

இந்த ராஜ்ஜியத்தை ஆளப்போகும் இந்த எதிர்கால ராஜாக்களின் இன்றைய நிலை என்ன?

சிறுவர்கள் சமாதானத்தின் சரணாலயங்கள். இன்றைய சமாதானச் சூழலில் இந்த சரணாலயங்களின் நிலையைப் பற்றி சற்று சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்கலாமா?

எமது நாட்டில் நிலவும் யுத்த சூழல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் சரணாலயமாகத் திகழும் வவுனியா மாவட்டத்திலுள்ள சிறுவர்களின் நிலையை ஆய்விற்கு எடுத்துக் கொள்வோம்.

யுத்த சூழ்நிலை ஒரு சமூகத்தில மற்ற வயதினரைவிடச் சிறுவர்களையே மிக மோசமாகப் பாதிக்கின்றது. ஒரு பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஆரோக்கியமான குடும்ப சமூகக் கட்டமைப்பு மிக அவசியம்.

நீண்டகாலமாகத் தொடரும் யுத்தம் காரணமாக குடும்ப - சமூகக் கட்டமைப்புகள் சிதைக்கப்படுவதனால் சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது.

பெற்றோரின் உயிரிழப்புக்கள், தொடர்ச்சியான இடம்பெயர்வுகள், சொந்த வீடுகளை இழத்தல், அடிப்படை சுகாதார சேவைகள் கிடைக்காமை, பாடசாலைக் கல்வியில் ஏற்படும் தடங்கல்கள் போன்ற போரின் பின்விளைவுகள் சிறுவர்களை மிக மோசமாகப் பாதிக்கின்றன.

எமது நாட்டில் நிலவும் யுத்த சூழல் இங்கு வாழும் சிறுவர்கள் மத்தியில் நேரடியாக மட்டுமன்றி பல மறைமுகமான தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இச்சிறுவர்களின் உடல்ரீதியான பாதிப்புக்களை மட்டுமன்றி கண்ணுக்குப் புலப்படாத பல உளவியல் ரீதியான பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

ஏறத்தாழ 18 வருடங்களுக்கு மேல் இந்த நிலை நீடிப்பதால் யுத்த சூழலிலேயே பிறந்து வளர்ந்து இயல்பான சமூக - கலாசாரக் கட்டமைப்பையே காணாது ஒரு தலைமுறை வளர்ந்து வரும் அவலமும் இங்கு தோன்றியுள்ளது.

### மறுசீரமைப்பு

யுத்தத்தினால் சிதைந்துபோன உள்ளகக் கட்டமைப்புகளை, வீடுகளை, பாலங்களை நிதானமாக நாம் மறுசீரமைக்கலாம். ஆனால், யுத்தத்தின் சத்தங்களிலும் நாம் கவனம் செலுத்தவேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன.

அவை சிறுவர்களின் போஷாக்குமகல்வியுமாகும்.

ஏனெனில், இன்று இவற்றினால் ஏற்படும் மாற்றங்கள், தாக்கங்கள் எமது எதிர்கால செயற்பாடுகளால் மீள மறுசீரமைக்கமுடியாதிருக்கும். எனவேதான் இன்றைய இளைய சமுறையின் கல்வியிலும் போஷாக்கிலும் யுத்தத்தின் மத்தியிலும் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

இன்று நாம் இவற்றைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்தித்து, காத்திரமான நடவடிக்கை எடுக்காவிடில் இந்த மண்ணில் எதிர்காலத்தில், ஒரு நலிந்த கல்வியறிவு குன்றிய ஒரு சமூகம் உருவாவது தவிர்க்கமுடியாமல் போகும்.

எனவே காலத்தின் தேவையை உணர்ந்து சிறுவர்களின் கல்வி, போஷாக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் தமது பங்களிப்பை வழங்குவது இந்த சமூகத்தின் முன்னுள்ள தார்மீகக் கடமையாகும்.

### சிறுவர் போஷாக்கு

போஷாக்கு என்றதும் எமது நினைவில் முதலில் வருவது உணவு. நிச்சயமாக ஒரு கட்டடத்திற்கு அத்திவாரம் எவ்வளவு அவசியமோ, போஷாக்கிற்கு உணவு அவ்வளவு முக்கியமானது. ஆனால், சத்தான உணவு மட்டும் இருப்பின் ஆரோக்கியமான போஷாக்கு கிடைத்துவிடாது. சத்தான உணவை விட வேறு பல காரணிகளும் போஷாக்கைத் தீர்மானிக்கின்றன.

நிலையான குடும்ப வருமானம், அடிப்படை சுகாதார வசதிகள், சுத்தமான குடிநீர், மலசலகூட வசதிகள், தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள், திட்டமிடப்பட்ட குடும்பம் போன்ற பல காரணிகள் போஷாக்கைத் தீர்மானிக்கின்றன.

எனவே சிறுவர் மத்தியில் காணப்படும் போஷாக்கின்மையை நிவர்த்தி செய்யவேண்டுமானால் சத்தான உணவை வழங்கினால் மட்டும் போதாது.

போஷாக்கின்மைக்கான ஏனைய காரணங்களையும் கண்டறிந்து அவற்றையும் நிவர்த்தி செய்யவேண்டும்.

எமது நாட்டில் சிறுவர் போஷாக்கின்மைக்கு மேலுள்ள காரணிகளுடன் மக்கள் மத்தியில் உள்ள போஷாக்குப் பற்றிய மூடநம்பிக்கைகள், அறியாமை, சமூக, சமய, கலாசார நம்பிக்கைகளும் காரணமாக அமைகின்றன. எனவே போஷாக்குப் பற்றிய விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.

சிறுவர்கள் மத்தியில் காணப்படும் போஷாக்கின்மை காரணமாக அவர்களது உடல், உள வளர்ச்சிகள் பாதிக்கப்படும். கல்வி கற்கும், சிந்திக்கும் திறன் குன்றும். வினைத்திறன் குன்றும். மொத்தத்தில் ஆரோக்கியமற்ற, நலிந்த, புத்திக்கூர்மையற்ற, வினைத்திறன் குறைந்த சமூகம் உருவாகும்.

இலங்கையில் ஏனைய மாவட்டங்களைப் போலவே வவுனியா மாவட்டத்திலும் புரதச் சத்து, இரும்புச் சத்து, விற்றமின் ஏ குறைபாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போஷாக்கு ஆய்வுகள் இதனை உறுதிசெய்கின்றன.

1999ஆம் ஆண்டு பூந்தோட்டம், வேப்பங்குளம், நெலுக்குளம் நலன்புரி நிலையங்களில் 5 வயதுக்குட்பட்ட 400 சிறுவர்கள் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியினால் போஷாக்கு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர்.

அதன் பிரகாரம் 51 சதவீதமான பிள்ளைகள் நீண்டகால புரதச்சத்து போஷாக்கு இன்மையாலும் 32 சதவீதமான பிள்ளைகள் குறுகியகால புரதச் சத்து போஷாக்கு இன்மையாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

### புரதச் சத்தின்மை

2000ஆம் ஆண்டு சிதம்பரபுரம், அடப்பங்குளம், கோவிற்புளியங்குளம் நலன்புரி நிலையங்களில் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிகளினால் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மத்தியில் போஷாக்கு ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் 42 சதவீதமான சிறுவர்கள் மத்தியில் நீண்டகால புரதச் சத்துப் போஷாக்கின்மையும் 19.5 சதவீதமான சிறுவர்கள் மத்தியில் குறுகிய கால புரதச் சத்து போஷாக்கின்மையும் இருப்பது கண்டறியப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் இளம் சிறுவர்களின் மத்தியில் மட்டுமன்றி பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் போஷாக்கின்மை காணப்படுகிறது. 2001ஆம் ஆண்டு ஜி.ரி.இசற் நிறுவன உதவியுடன் 15 தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 4ஆம், 5ஆம் வகுப்பைச் சேர்ந்த 1,400 மாணவர்கள் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அந்த ஆய்வின் பெறுபேறுகளின்படி 19 சத வீதமான மாணவர்கள் நீண்டகால புரதச் சத்துப் போஷாக்கின்மையாலும், 17.5 சதவீதமான மாணவர்கள் குறுகிய கால புரதச் சத்து போஷாக்கின்மையாலும், 43.7 சதவீதமானவர்கள் குருதிச்சோகையாலும் பாதிககப்பட்டிருந்தனர்.

அரசின் 100நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2002ஆம் ஆண்டு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 54 பாடசாலைகளைச் சேர்ந்த 21,123 மாணவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அந்த ஆய்வின் முடிவில் 22 சதவீதமான மாணவர்கள் மத்தியில் நீண்டகால புரதச்சத்து போஷாக்கு இன்மையும் 16 சதவீதமான மாணவர்கள் மத்தியில் குறுகியகால புரதச்சத்து இன்மையும் காணப்பட்டன.

2001ஆம் ஆண்டு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 55 பாடசாலைகளில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வைத்திய கலாநிதி
**ஆறுமுகம் கேதீஸ்வரன்**
(சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா)

பரிசோதனைகளின் பிரகாரமும் 15 சதவீதமான பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீண்டகால புரதச்சத்து போஷாக்கின்மையும் 17.5 சதவீதமான மாணவர்கள் மத்தியில் குறுகியகால புரதச்சத்து போஷாக்கின்மையும் அவதானிக்கப்பட்டது.

மேற்படி ஆய்வுகளின் முடிவில் வவுனியா மாவட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் குறுகியகால புரதச்சத்து போஷாக்கின்மையும் அவதானிக்கப்பட்டது. மேற்படி ஆய்வுகளின் முடிவுகள் வவுனியா மாவட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் குறிப்பாக இடம்பெயர்ந்து வாழும் சிறுவர்கள் மத்தியில் நிலவும் போஷாக்கின்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**எரிக் கணேஷ்**
ஸ்தாபனத்தினரின்
சுன்னாகம் கிளை தனது ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு இம்மாதம் தமது அபிமானிகளுக்கு விசேட கழிவு வழங்குவதற்கு முன்வந்துள்ளது.
▲ மங்கிடும் கண்களுக்கு பொங்கிடும் பார்வை
▲ உங்கள் அழகு மென்மேலும் பொலிந்து துலங்கிட
▲ முக அமைப்புக்கேற்ற சங்குப் பற்கள்
*இவை மட்டுமல்ல! மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்திட கைதேர்ந்த ஸ்தாபனம்*
**எரிக் கணேஷ்**
564, 566, 91, **K.K.S. Road**, கொக்குவில் சந்தி.
80, கொக்குவில் சந்தி, கொக்குவில்
பழைய பொலீஸ் நிலையம் முன்பாக 80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்
(4433)

**ESTABLISHED 1958**
**திருஞானாஸ் அன் கோ**
CHARTERED·CERTIFIED ACCOUNTANTS (UK)
APPROVED ACCOUNTANTS
CERTIFIED PUBLIC ACCOUNTANTS
REGISTERED AUDITORS
**திருஞானாஸ் கட்டடம்,**
141. மின்சார நிலைய வீதி. (மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
எமது ஸ்தாபனம் மீண்டும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நாளை (03.06.2002) திங்கட்கிழமை முதல் திறந்திருக்கும் என்பதை அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், நண்பர்களுக்கும் மேலும் எல்லோருக்கும் பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.
*பேராசிரியர் (டாக்டர்)* வெ.திருஞானசம்பந்தர்
**Dr.V.THIRUGNANASAMBANTHAR**
M. Com. Ph.D., ACIS (UK), FCMA (UK), FTII (SL.),
ACA (NIG.), MCIM (UK), RA (SL.), FSCMA (SL.),
MIIA (AUST.) CPA, FCCA (UK).
(4428)

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து கனகசபாபதி

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து கனகசபாபதி அவர்கள் 28.05.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் பாலகிருஷ்ணன், சிவபாக்கியம், விஜயலட்சுமி, துரைசிங்கம்(டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பொன்னம்பலம், இரத்தினசிங்கம் மற்றும் சுப்பிரமணியம், சரோஜினிதேவி, நாகம்மா, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மல்லிகாதேவி, இராசேந்திரம், நவரத்தினராசா அருள்நந்தினி(டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் சிவசோதி(டென்மார்க்), சிவனேஸ்வரி இராஜ்குமார்(ஜேர்மனி) சிவாஜினி, பிரியங்கா(டென்மார்க்), நிதர்சன்(டென்மார்க்), நிவ்வியங்கா(டென்மார்க்), யதீஸ்கரன், திவாகரன்(டென்மார்க்), சதீஸ்கரன், நந்தினி, நர்மதா, ஸ்ரீதுர்க்கானந்தன் ஆகியோரின் பேரனாரும் நிசாந்தன்(டென்மார்க்), லக்ஷனா(டென்மார்க்) ஆகியோரின் அருமைப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.06.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*D.R.O. வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(4431)

தகவல்:
கனகசபாபதி பாலகிருஷ்ணன்(பாலு)
கனகசபாபதி துரைசிங்கம்(டென்மார்க்)
(பிள்ளைகள்)







ஜப்பான் மற்றும் தென்கொரியாவில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடும் நாடுகளின் ரசிகர்கள் வேடிக்கையாக அலங்காரங்களை செய்துகொண்டு மைதானத்தில் வளைய வருகிறார்கள். அவ்வாறு வளைய வரும் ஐரிஷ் மற்றும் டென்மார்க் ரசிகர்கள் இருவரை மேலுள்ள படத்தில் காணலாம். ஜப்பானில் சம்பிரதாய முறைப்படி தாடேரா பேரிகை முழங்கப்பட்டு போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நிறஞ்சனாஸ்
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா,
ரகுவரன் மற்றும் பலர் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22357)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH with GRAMMAR
By: BRITTO
ஆரம்பம்: 03.06.2002 Mon3.00p.m
(4421)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ்
நடிப்பில்
கன்னத்தில் முத்தமிட்டால்
(சீஸ்)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (புதிய நேரம்)
(4417)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக்
நடித்த
தமிழன்
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
நாளை முதல் எஜமான்
(C/22386)


## முகமாலையில் குவிந்துள்ள இலக்கத் தகடுகள்

முகமாலை படையினரின் சோதனை நிலையத்தில் பெருமளவு வாகன இலக்கத் தகடுகள் குவிக் கப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வந்த மோட்டார் சைக்கிள்கள், லொறிகள், வான்கள் உட்பட அனைத்து வாகனங்களிலும் பொருத்தப்பட்டிருந்த 'த' இலக்கத் தகடுகளே இவ்வாறு குவிக்கப்பட்டுள்ளன.

'த' இலக்கம் பொறிக்கப்பட்ட இலக்கத் தகடுகளுடன் குடாநாட்டுக்குள் வாகனங்கள் வருவதை முகமாலையில் படையினர் தடுத்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-117)


தையல் வேலைக்கு ஆள்கள் தேவை
கே.கே.எஸ்.றோட்,
3ஆம் கட்டை, கொக்குவிலில்
அமைந்துள்ள
குமார் தையலகத்திற்கு
தைப்பவர்கள் (ஆண்கள்)
உடன் தேவை.
தொடர்பு கொள்ளவும். (4435)

படிவம்
விவசாயக் கல்லூரிகளில் விவசாய டிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.
முடிவு திகதி:30.06.2002
பாரதி பதிப்பகம்
430.காங்கேசன்துறைவீதி.யாழ்ப்பாணம்.
(C/22374)

படிவம்
இலங்கை கல்வி நிர்வாக சேவையின் IIIஆம் வகுப்பிற்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. 30வயதுக் குட்பட்ட அனைத்துப் பட்டதாரிகளும் விண் ணப்பிக்கலாம்.
முடிவு திகதி:28.06.2002
பாரதி பதிப்பகம்
430.காங்கேசன்துறைவீதி.யாழ்ப்பாணம்.
(C/22375)

ஜெசித்தாராவின்
புதிய கேரளத் தயாரிப்பு
குங்குமப்பூ புரியாணி
&
சில்லி சிக்கன்
அதிக சுவை
புதுப்பொலிவு
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா
19/3, சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(4432)


# புதுக்குடியிருப்பில் மினிபஸ் விபத்து கர்ப்பிணி உட்பட 11 பேர் படுகாயம்

கிளிநொச்சி,ஜூன்2

புதுக்குடியிருப்பில் இருந்து புளியங்குளத்திற்குச் சென்ற மினிபஸ் ஒன்று பிச்சம்பீலி என்ற ஏற்றத்தில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 11பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

புதுக்குடியிருப்புக்கு அண்மையில் உள்ள இந்த ஏற்றத்தில் மினிபஸ் ஏறமுற்பட்ட சமயம், மினிபஸஸின இயந்திரம் பயணிகளின் பாரத்தை இழுத்துச் செல்ல முடியாமல் போனதால் குறித்த பஸ், ஏற்றத்தில் இருந்து பின்பக்கமாக உருண்டு வந்த சமயம் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் இரு சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட பல்வேறு இடங்களை யும் சேர்ந்த 11பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

பருத்தித்துறை பொலிகண்டியைச் சேர்ந்த செல்லன் கதிரமலை செல்வராசா (வயது43) மற்றும் இவரது தாயாரான சிவக்கொழுந்து (வயது 62), சபாரட்ணம் வள்ளிப்பிள்ளை (வயது 60), இவரது மகளான ராஜ்குமார் லீலாவதி (வயது26), அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சண்முகம் இந்திரா (வயது 42) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகத் தமிழீழ காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-6)

## வேலணை விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்2

வேலணையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் சிக்கி உயிரிழந்த 3ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த கு. கோணேஸ்வரலிங்கத்தின் (வயது32) மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை என்பன நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றன.

உயிரிழந்தவரின் மனைவி சடலத்தை அடையாளம் காட்டினார். சடலம் இன்று காலை நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்படும். (எ-6-15)

## கவுணாவத்தை வேள்வியில் 50 ஆடுகள் பலி!

தெல்லிப்பழை கருகம்பனை கவுணாவத்தையில் நேற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடுகள், கோழிகள் பலியிடப்பட்டன.

ஆலயச் சுற்றாடலுக்கு அடியார்கள் செல்ல அதிகாலை நேரம் அனுமதிக்கப்படாத போதிலும், ஆலயத்திற்கு அண்மையில் உள்ள இடத்தில் வைத்து இவை பலியிடப்பட்டன.

இவ்வேள்வியில் பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டதுடன் பலியிடப்பட்ட ஆடுகள், கோழிகள் அவ்விடத்திலேயே ஏலம் கூறிவிற்பனை செய்யப்பட்டன. (எ-86)

## கலந்துரையாடல்

கொக்குவில்,ஜூன்2

யாழ். பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு CH II மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ம-69)

## சட்ட மாணி கற்கைநெறி அனுமதிப் பரீட்சை இன்று யாழில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்2

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கொழும்பு நிலையத்தில் சட்டமாணிக் கற்கைநெறியைப் பயில்வதற்கு விண்ணப்பித்த யாழ். மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை கொழும்பில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (எ-ரி)

## துயர் பகிர்வுப் பிரார்த்தனை

சென்ற மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மின்சாரம் தாக்கி அகால மரணமடைந்த
யாழ். குடாநாட்டின் மூன்று தமிழ் நெஞ்சங்களான

**தனபாலசிங்கம் தயாபரன்**

இவரது சகோதரிகளான

**கலைச்செல்வி தனபாலசிங்கம்**

**கலைவாணி தனபாலசிங்கம்**

ஆகிய மூவரதும் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் -
உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இவர்களது தாயார் நலமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- நல்லூர் றோட்டறக்ட் கழகம்.

(C/22376)

## மரண அறிவித்தல்கள்

### தனபாலசிங்கம் கலைவாணி (கலா)

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வளாக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தன்பாலசிங்கம் கலைவாணி (கலா) அவர்கள் நேற்று (01.06.2002) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அகால மரணமானார்.

அன்னார் தனபாலசிங்கம் - சிவயோகநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் தயாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான கலைச்செல்வி (செல்வி), தயாபரன் (தயா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வளாக வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (4434)

தகவல்:
மா.தனபாலசிங்கம்
(தந்தை)

### கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்

உடுவில், லவ் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (01.06.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*லவ் லேன்,*
*உடுவில்.* (C/22380)

தகவல்:
க.அசோகன்


விநியோகஸ்தர்கள்
(DISTRIBUTORS)
தேவை
கொழும்பில் ஆங்கில மருந்து வகைகளை
இறக்குமதி செய்துவரும் தனியார்
நிறுவனமொன்றுக்குப் பின்வரும் இடங்களுக்கு
விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.
✪ யாழ்ப்பாணம் ✪ கிளிநொச்சி
✪ மன்னார் ✪ வவுனியா
✪ திருகோணமலை
தகைமை
☞ விநியோக அனுபவம்.
☞ வாகன வசதி
☞ வங்கி உத்தரவாதம் (Bank Guarantee)
அல்லது உடன் பணம் கொடுப்பனவு.
(உடன் பணம் கொடுப்பனவு செய்வோருக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.)
மேலதிக விவரங்களுக்கு
உடன் தொடர்புகொள்ளவும்.
ARKEM PHARMACEUTICALS
[Importers & Distributors of Pharmaceutical Products]
# 12-1/1, Prince of Wales Avenue,
Colombo - 14.
T.P: 075 - 344436 / 077 - 805738
Tele/ Fax: 470290
Email: arkem@sltnet.lk
(C/22369)

உங்கள் வாழ்முறைக்கும் தேவைகளுக்கும் மிகப் பொருத்தமான
கடன் அட்டைகளை
ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.கிளை
இப்பொழுது வழங்குகின்றது
இலகுவானதும், வசதியானதுமான ஓர் உலகிற்கு உங்களை நாம் வரவேற்கிறோம்.
நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்களுக்குப் பொருத்தமானதென நீங்கள் கருதும் அட்டையினைத் தெரிவு செய்வதே!
அது மிக விரைவில் உங்கள் கையிலிருப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம்.
மேலும்
ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து மட்டுமே கிடைக்கும்
கவர்ச்சிகரமான, மேலதிக நன்மைகளும் உங்களை நாடி வரும்
விடுமுறைச் சுற்றுலாக்கள்,
விலைக் கழிவு வசதிகள்,
கடன் நன்னடத்தை வெகுமதிகள்,
இன்னும் பல....
தொடர்புகளுக்கு:
ஹற்றன் நஷனல் வங்கி
HATTON NATIONAL BANK
யாழ்ப்பாணம்.
Card Centre 479, Bauddhaloka Mawatha, Colombo 8
தொலைபேசி: 021-2787, 021-3463 074 517970, 074 517979.
தொலைநகல்: 021-3194
(சி22370)

## தென்னாபிரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றுமொரு தடவை தரையிறக்கு வதற்கு முயற்சி மேற்கொண்டபொழுது விமானம் மலையொன்றில் மோதி விபத்துக்குள்ளானது என்றும் - கூறப் படுகிறது.

தென்னாபிரிக்க அணியின் தலை வராக இருந்த சமயம் - 2000 ஆம் ஆண்டில் - லஞ்ச ஊழல் குற்றச்சாட் டின் பேரில் ஹன்ஸி குரென்ஜே கிரிக்கெட் விளையாட்டில் இருந்து நிறுத்தப்பட்டிருந்தார்.

தென்னாபிரிக்க விளையாட்டு வீரர்களைத் திறமையாக விளையா டாது இருக்கும்படியும் அதற்கென அவர்களுக்கு பணம் வழங்கப்படும் என்றும் தான் கூறியதை ஐக்கிய கிரிக்கெட் சபை விசாரணையின்போது ஹன்ஸி குரென்ஜே ஒப்புக்கொண் டார். இந்த வகையில் சுமார் ஒரு லட்சம் டொலர்களை அவர் பெற்றி ருந்ததாகவும் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியை மிகக்குறுகிய காலத்தில் முன்னணிக்குக் கொண்டுவந்தவர் குரென்ஜே.

அவரது சாதனைகள் கிரிக்கெட் உலகில் என்றைக்கும் நின்று நிலைக் கும். (ஐ-9-6)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கே.எச்.லலித் சிசர (வயது 39 - கண்டி வீதி, வவுனியா), மனோக ரன் மோகனபிரசாத் (வயது 17 - மானிப்பாய்), மகாலிங்கம் உதய குமார்(வயது 28 - புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு) ஆகிய 4 பேருமே காயமடைந்தனர்.

'றொட்' உடைந்ததால் கட்டுப் பாட்டை இழந்த வான் அருகில் இருந்த கம்பம் ஒன்றுடன் மோதி தடம்புரண் டது. இதனால் அந்த வான் பலத்த சேதமடைந்தது. (ஐ-6)


**எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்**

பிரபு, ஜெயராம், ரோஜா *நடித்த*
★ கவுண்டர் வீட்டு மாப்பிள்ளை
வடிவேலு *நடித்த*
★ நேற்று வரை நீ யாரோ
(பிரதிகள் உடன் பெறலாம்)

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம். (C/22379)


## ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவே இந்த அழிப்பு நடவடிக் கையை உடனிறுத்த வேண்டும் என்று சபை கோருகின்றது.

- இவ்வாறு தீர்மானத்தில் தெரி விக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தை ஜனாதி பதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், இராணுவ மற்றும் கடற்படைத் தள பதிகள் ஆகியோருக்கு அனுப்புவது என்றும் பேரவை முடிவு செய்துள்ளது.

கடந்த காலத்தில் இராணுவத் தேவைகளுக்காக பல்லாயிரக்கணக் கான பனை மரங்கள் தறிக்கப்பட்டி ருக்கின்றன. சமாதான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத் திலும் குடாநாட்டின் சில இடங்க ளில் பனை மரங்கள் தொடர்ந்து தறிக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட் டப்படுகிறது.

(ஐ-3)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படையினர் வெளியேறியுள்ள மற் றும் வெளியேறவிருக்கும் பாட சாலைகளை நேரில் காண்பித்தார்.

கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலயம், கிண்ணியடி சரஸ்வதி வித்தியாலயம், காயங்கேணி சரஸ் வதி வித்தியாலயம் ஆகியவற்றில் இருந்து படையினர் முற்றாக வெளி யேறியுள்ளனர்.

பிள்ளையாரடி அரசினர் பாட சாலை, புதுநகர் விக்னேஸ்வரா வித்தி யாலயம், வலையிறவு அரசினர் பாடசாலை ஆகியன விரைவில் மீள ஒப்படைக்கப்பட்டுவிடுமென விமா னப்படை முகாம் கட்டளை அதிகாரி ஆர்.எல். சிறிநிசாந்த, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் உப்புல் சென விரத்ன ஆகியோர் இக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

எனினும் மொறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத் திற்கு இக்குழுவினர் அழைத்துச் செல்லப்படவில்லை எனத் தெரிவிக் கப்பட்டது. (ஐ-9)


**எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்**

பிரபுவின்
✪ கவுண்டர் வீட்டு மாப்பிள்ளை
✪ நேற்று வரை நீ யாரோ

**ITN**
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி. (C/22377)


## மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இவரது சகோதரரான த.தயாபரன் (வயது 26) என்பவர் கடந்த 27ஆம் திகதியும் -

சகோதரியான த.கலைச்செல்வி (வயது 28) என்பவர் கடந்த 29ஆம் திகதியும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

இந்த அவலச் சம்பவத்தில் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று டன் மூன்றாக உயர்ந்தது.

இதேவேளை -

உயிரிழந்தவர்களின் தாயாரான தனபாலசிங்கம் சிவயோகநாயகி மின் சாரத்தால் கருகிய வலதுகை முழங் கைக்குக் கீழ் துண்டிக்கப்பட்ட நிலை யில் தொடர்ந்தும் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். (எ-6-15-139)

## தீவக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படையினர் தொடர்ந்து மறுத்து வரு கின்றனர்.

புலிகளை அனுமதிப்பதற்கு 12 நிபந்தனைகளை அரசு விதித்திருக் கிறது. இந்த நிபந்தனைகள் புரிந்து ணர்வு உடன்படிக்கையை அடியோடு மீறுபவையாக அமைந்துள்ளன என்று புலிகள் தரப்பு குற்றஞ்சாட்டியிருக் கிறது.

இதனால் உருவாகியிருக்கும் நெருக்கடி நிலை மீது கண்காணிப் புக் குழு விசேட கவனம் செலுத்தி வருகிறது.

கண்காணிப்புக் குழுவின் தலை வர் ரொண்ட் புருகோவிட் நேற்றுமுன் தினம் தீவுப் பகுதிக்கு நேரில் சென்று கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பியிருந்தார். செவ்வாயன்று அவர் வன்னி சென்று புலிகளின் பிரதிநிதிகளோடு பேசுவார்.

மாற்று யோசனைகளுக்கு புலி கள் தரப்பின் இணக்கத்தைப் பெற அவர் முயற்சிப்பார் என்று தெரிய வருகிறது. (ஐ-6)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதற்கு முன்னர் விடுதலைப் புலி கள் மீதான தடையை நீக்கக்கூடிய சூழ்நிலை தற்சமயம் உருவாகிவரு வதாகவும் -

அதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பிரதமரின் விஜயம் அமைந்துள்ளது என்றும் -

கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (ஐ-3)

## பிரான்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மையை நேரில் மதிப்பிடவே யாழ்ப் பாணம் வந்துள்ளேன்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பிரெஞ்சு நிறுவனம் ஒன்று எமது நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. அந்த பிரெஞ்சு நிறுவனத்தின் உதவியுடன் பணியை இங்கு மேற்கொள்ள அரசு எமக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இங்கு தற்சமயம் கண்ணிவெடி அகற்றும் அமெரிக்க நிபுணர்களுக்கு மேலதிக வேறு புதிய பிரதேசங் களில் கண்ணிகளை அகற்றும் பணியை நாம் மேற்கொள்வோம்.

இந்தப் பணிகளை ஆரம்பிக்க விரைவில் நிபுணர்கள் வருவர்

- என்றார். (ஐ-3)

## புலிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யும் என்று படை அதிகாரி தெரிவித் துள்ளார்.

இதையடுத்து ஜோசப் பரராஜசிங் கம் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோருடன் தொடர்புகொண்டு இதுகுறித்து விளக் கம் கோரினார்.

இதனையடுத்து -

வடக்கு - கிழக்கில் இராணுவக கட்டுப்பாடற்ற பிரதேசம் உட்பட எந் தப் பிரதேசத்துக்கும் தொலைபேசி இணைப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை என்று ரெலிகொம் பணிப்பாளர் கே.டி.சோமசிறிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்டின் பெர் னாண்டோ அறிவித்துள்ளார்.(ஐ-3)


**எக்ஸ்போ விமான சேவை**
**யாழ்ப்பாணம்-கொழும்பு**

**இந்த விமான சேவை**
**நாளை (03.06.2002) திங்கட்கிழமை**
**ஆரம்பமாகவுள்ளது என்பதை**
**மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

இந்தச் சேவைகளுக்குரிய பயணச்சீட்டுக்கள் நேற்று முன்தினம் முதல் வழங்கப்படுகின்றன.

விடுமுறை நாளான இன்று ஞாயிற்றுக்கிழமையும் அலுவலகம் திறந்திருக்கும்.

நாளை பயணம் செய்வதற்கான பயணச்சீட்டுக்களை இன்று பெற்றுக்கொள்ளலாம்.

**எக்ஸ்போ விமான சேவை**
மகாலட்சுமி கட்டட மேல்மாடி,
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள்: 3564/2024 (C/22378)

**A/L 2004 கலைப்பிரிவு வகுப்புகள் நடைபெறுகின்றன**

Eco. - P.மோகன் (Sat., Sun.)7.30-8.30
H.C.- S.சோதி (Sat.,Sun.)8.30-9.30
Tamil- N.பாலா (Sat.,Sun.)4-5
Log.- R.P.சர்மா (Sat.,Sun.)5-6
Dra. - R.ரமேஷ் (Sat.,Sun.)3-4
Geo.- S.[illegible]கன் (Tue.,Thu.)4-5
Chir. - M.றெஜினா (Mon.,Fri.)4-5
Eng.- V. [illegible]பாஸ்கர் (Sat.,Sun.)11-12

"கல்வி உலகின் நட்சத்திரம்"

**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம்.
(4370)

**தென்பகுதி வரும் பயணிகளுக்கு**
***ஒரு நற்செய்தி!***

சகல வசதிகளுடன் சைவ, அசைவ உணவுகளுடன் கூடிய அமைதியான சூழலில் தங்குமிட வசதிகளுக்கு நீங்கள் விஜயம் செய்யவேண்டிய இடம். (C/22339)

**சிவா ஹோட்டல்**
இல. 20, ஒல்கொட் மாவத்தை, காலி. T.P.: 09-46017

**MARBLES FLOOR POLISHING SERVICES**

**மாபிள்ஸ் நிலங்கள் மினுக்கும் சேவை**

பழைய றெறாசோ நிலங்களையும், ஏனைய நிலங்களையும்
மெஷின் மூலமாக மினுக்கி, புதுமெருகூட்டி
அழகாக்க நாடுங்கள்:

**மாபிள்ஸ்**
42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P. 2328.
தொல்புரம், சுழிபுரம்.
(C/22315)

☛ நாம் முன்னர் வேலை செய்த நிலங்களுக்கு கழிவு உண்டு.

புதிதாகப் போடும் றெறாசோ
வர்ண வேலைகளுக்கு ஓடர் எடுக்கப்படும்.

**புதியதோர் அறிமுகம்!**

அடிக்கடி ஏற்படும் மின் தடையால் சிரமப்படுகின்றீர்களா?
மின் தடையைத் தவிர்க்கப் பாவியுங்கள் OSAKI (ஒசாகி)
தானியங்கி இன்வேட்டறினை.




மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்.

**DART ENTERPRISE,**
*No.11,12, New Market (Inside), Jaffna.*

**டாட் என்ரபிறைஸ்,**
இல.11,12,நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (C-22243)


## மரண அறிவித்தல்

### திருமதி தர்மலிங்கம் நல்லம்மா

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் நல்லம்மா அவர்கள் நேற்று (01.06.2002) சனிக்கிழமை இரவு 8.10 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தங்கேஸ்வரி, புவனேஸ்வரி, கமலேஸ்வரி, ஜெயராணி, பாமினி, தர்ம குலசிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2002) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயில் ஒழுங்கை,*
*கல்வியங்காடு.*
(4436)
தகவல்:
உறவினர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.